ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය

14.05.2008 - மலர் 05, இதழ் 10



## 'வெசாக்' தினத்தின் சிறப்பு

## 'பாண்' உருவாகும் விதம்

விலை ரூபா 12/-



ஊக்க மருந்துகள் எவ்வாறு இனங்காணப்படுகின்றன?



இந்து நதிப் பள்ளத்தாக்கின் புராதன நாகரிகம்

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெசாக் பண்டிகை நிகழ்வுகள்

✱ பண்டிகை நாட்களில் பௌத்தர்கள் தாவர உணவுகளையே உண்ண வேண்டுமென்பதும் போதைவஸ்து அருந்தக்கூடாதென்பதும் நியதி. பரிசுப் பொருட்கள் எளிமையானவையாக இருக்க வேண்டும். பிரதானமாக பிக்குகளுக்கு கொடுப்



பவை. மக்கள் அளவுக்கு அதிகமாக சாப்பிடக்கூடாது. பௌத்த கொண்டாட்டங்கள் மகிழ்ச்சிக்குரியவை, வண்ணமயமானவை.

✱ சீனாவில் 'வெசாக்' பண்டிகை கொண்டாட்டங்களில் சீன கலாசாரத்தின் பாரம்பரிய நிகழ்வுகளான 'பறக்கும் நாக நடனம்' போன்ற கலை அம்சங்களும் இடம்பெறுகின்றன. இந்தோனேஷியாவில் வெசாக் கூடுகள் காகிதத்தாலும் மரத்தாலும் செய்யப்படுகின்றன. சில நாடுகளில் கூண்டில் அடைக்கப்பட்ட பறவைகள் சுதந்திரமாகப் பறக்க விடப்படுகின்றன. எல்லா உயிரினங்களும் மகிழ்ச்சியாகவும் சுதந்திரமாகவும் வாழவேண்டும் என்பதை சுட்டிக்காட்டும் வகையில் இவ்வாறு செய்யப்படுகின்றது.

✱ அநேக பௌத்த ஆலயங்களில் புலால் உணவுகள் தவிர்க்கப்பட்டு மரக்கறி உணவே வழங்கப்படுகின்றது. புத்த பகவானின் போதனைகளிலிருந்து பிரசங்கங்கள் செய்யப்படுகின்றன.



✱ புத்தபகவானின் நாளான வெசாக் பண்டிகை அவரின் பிறப்பு, பரிநிர்வாணம், முக்தி ஆகியவற்றை நினைவு கூரும் வகையில் கொண்டாடப்படுகின்ற போதிலும், ஜப்பானிய பௌத்தத்தில் ஏப்ரல் 8 ஆம் திகதி பிறந்த தினமாகவும் டிசம்பர் 8 ஆம் திகதி பரிநிர்வாணமடைந்த தினமாகவும் பெப்ரவரி 15 முக்தியடைந்த தினமாகவும் கொண்டாடப்படுகின்றன.


✱ எல்லா பௌத்தர்களும் ஐந்து நீதிப்போதனைகளைப் பின்பற்றி வாழ்கின்றனர். அதாவது, பின்



வரும் ஐந்து செயல்பாடுகளைத் தவிர்த்து வாழ்தல்.

1. உயிர்களுக்கு தீங்கு செய்தல்
2. கொடுக்கப்படாததை எடுத்தல்
3. தகாத பாலியல் நடவடிக்கை
4. சோம்பல், அரட்டை
5. போதைவஸ்து பாவித்தல்

✱ பௌத்த பாரம்பரியத்தில் மற்றவர்களுக்குக் கொடுத்து வாழ்வது ஒரு முக்கிய அம்சம். இல்லாதவர்களுக்குக் கொடுப்பது முக்கியம். அநாதை இல்லங்கள், முதியோர் இல்லங்கள், தர்மநிலையங்களுக்கு பக்தர்கள் செல்வதும் நன்கொடைகள், அன்பளிப்புகள் வழங்குவதும் முக்கியம்.




இளைஞர் அமைப்புக்கள் பாரிய அளவில் இரத்ததான நிலையங்களையும் நடத்துகின்றன.



# வைகாசி விசாகத் திருநாள்

இம்மாதம் 19 ஆம் திகதியன்று வைகாசி விசாக (வெசாக் பண்டிகை) திருநாள் கொண்டாடப்படுகின்றது. மேற்படி வெசாக் தினம் கொண்டாடப்படுவதன் பின்னணி வருமாறு:

இந்தியாவின் கபிலவஸ்து நகருக்கு அருகில் உள்ள 'லும்பினி' என்னுமிடத்தில் புத்தபகவான் அவதரித்தார். இவருடைய பிறப்பின் போது பல அதிசயங்கள் நடைபெற்றுள்ளன.



அரச குடும்பத்தில் பிறந்த இவருடைய பிறப்பைப் பற்றி ஆரூடம் கூறிய சோதிடர்கள் இவர் நோய், இறப்பு, முதுமை, துறவறம் ஆகிய நான்கையும் காணக் கூடாது என்றும், அவ்வாறு காணநேரிட்டால் உலக வாழ்வைத் துறந்து துறவியாகிவிடுவார் என்றும் கூறியதையடுத்து அவற்றை அவர் பார்க்க முடியாத வகையில் பெற்றோர் அவரை பாதுகாத்து வளர்த்தனர். ஆனாலும், காலப்போக்கில் அவர் இந்த நான்கையும் காணும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதனையடுத்து அவர் சோதிடர்கள் கூறியதுபோல் உலக வாழ்வைத் துறந்து துறவுக் கோலம் பூண்டார்.

புத்தபகவானின் வாழ்வில் இடம்பெற்ற முக்கிய மூன்று திருப்பங்களான பிறப்பு, பரிநிர்வாணம், முக்தி ஆகிய, இந்த மூன்று நிகழ்வுகளை நினைவு கூரும் வகையிலேயே இந்தத் திருநாள் கொண்டாடப்படுகிறது. இந்த மூன்று நிகழ்வுகளும் இந்த வைகாசி விசாக தினத்திலேயே இடம்பெற்றதனால் இத்திருநாள் வெகு விமர்சையாகக் கொண்டாடப்படுகிறது.

குழந்தைகள், சிறியோர், பெரியோர் என யாவரையும் மகிழ்ச்சிப்படுத்தும் ஒரு நிகழ்வாகக் கொண்டாடப்பட்டு வருவதுதான் 'வெசாக்' எனப்படும் இந்த வைகாசி விசாகத் திருநாள். இத்திருநாள் நம் நாட்டில் இன, மத, மொழி வேறுபாடின்றி அனைத்து மக்களாலும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இலங்கையில் மட்டுமன்றி தாய்லாந்து, ஜப்பான், மியன்மார், பூட்டான் மற்றும் உலகளாவிய ரீதியில் பல நாடுகளிலும் கொண்டாடப்பட்டு வருகிறது.

வைகாசி மாதத்தில் விசாக நட்சத்திரத்தில் இத்திருநாள் வருவதால் இந்நாள் 'வைகாசி விசாகத் திருநாள்' என்றழைக்கப்படுகின்றது. இந்த திருநாள் காலத்தில் நாடு முழுவதும் பரவலான முறையில் வண்ணத் தோரணங்கள் அமைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இத்தோரணங்கள் மூலம் பௌத்தம் தொடர்பான பல அரிய தகவல்கள், வரலாற்றுச் சம்பவங்கள் என்பன சுவைமிக்க கதைகளாக கூறப்படுவதை ரசிப்பதற்கென்றே மக்கள் அலை மோதுவதையும் காணலாம். இந்நாள்களில் ஓய்வு ஒழிச்சலின்றி தோரணங்களை பார்வையிடும் மக்கள் இளைப்பாறிக் கொள்ளவும் தாகசாந்தி செய்து கொள்ளவும் பசியை போக்கிக் கொள்ளவும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் ஆங்காங்கே தண்ணீர் பந்தல்கள், அன்னதானப் பந்தல்கள் என்பன அமைக்கப்பட்டு இருப்பதை இத்தினங்களில் காணக்கூடியதாக இருக்கும். பௌத்த தர்மத்தின்படி புண்ணியத்தை தேடிக் கொள்ளும் வகையில் இந்த தானம் வழங்கும் நடைமுறையானது பாரம்பரியமாக நடைபெற்று வருகின்றது. ஆங்காங்கே 'வெசாக்' தோரணங்கள் போடப்பட்டும், வீடுகளிலும் வீதியோரங்களிலும் பௌத்த வழிபாட்டுத் தலங்களிலும் வண்ண வண்ண (வெசாக் கூடுகள்) விளக்குக்கூடுகள் போடப்பட்டும் வரும் நிகழ்வானது துறவறத்தைத் தழுவிக் கொண்டு புத்த பகவான் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துக் கொண்டு மனித வாழ்க்கைக்கு ஒளியை ஏற்றி வைத்ததை நினைவு கூருவதாக அமைகின்றது.

புத்தபகவானின் இயற்பெயர் சித்தார்த்தர் என்பதாகும். இலட்சியத்தை நிறைவேற்றும் வல்லமை உள்ளவர் என்பதே இப்பெயரின் விளக்கமாகும். இவருடைய பிறப்பைப் பற்றி ஸ்ரீமத் பாகவதத்தில் ஏற்கனவே கூறப்பட்டிருப்பதால் இவருடைய பிறப்பு பகவானின் ஒரு அவதாரம் என்ற ரீதியில் இந்து வைஷ்ணவ மக்களும் புத்தபகவானை வழிபட்டு வருவதோடு இவ்வைகாசி விசாகத் திருநாளையும் மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகின்றனர்.

ஜி.நவராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த (சா/தர) பரீட்சையில் ஆகக் கூடியது 9 பாடங்கள்



எதிர்வரும் டிசம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள க.பொ.த (சா/தர) பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் மாணவர்கள், ஆகக் கூடியது 9 பாடங்களுக்கே தோற்றக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் க.பொ.த (சா/தர) பரீட்சையில் மாணவர்கள் 10 அல்லது 11 பாடங்களுக்குத் தோற்றக்கூடியவர்களாக இருந்தனர்.

எனினும், இனிவரும் காலங்களில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் 6 பிரதான பாடங்களுக்கும் ஏனைய 3 பாடப்பிரிவுகளில் ஆகக் கூடியது 3 பாடங்கள் உட்பட மொத்தம் 9 பாடங்களுக்கே மாணவர்கள் தோற்றமுடியும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

மேலதிக பாடங்களைத் தெரிவு செய்யும்போது தற்போதுள்ள பாடப்பிரிவுகள் 3 இல் ஒன்று எனும் ரீதியில் 3 பாடங்களைத் தெரிவு செய்ய வேண்டியேற்படும்.

தொழில்நுட்பம், அழகியல் மற்றும் கலை/வணிகம் ஆகிய 3 பாடப்பிரிவுகளில் 2 பாடங்களை தெரிவு செய்யக்கூடிய சந்தர்ப்பம் இனி வழங்கப்படமாட்டாது என அவர் மேலும் தெரிவித்தார்.

# நாடளாவிய ரீதியிலான தமிழ்மொழி தினப்போட்டிகள்

இவ்வருடத்திற்கான நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான தமிழ்மொழி தினப்போட்டிகளை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை கல்வியமைச்சின் தமிழ்மொழிப் பிரிவு மேற்கொண்டுள்ளது.

அனைத்து வலயக்கல்வி அலுவலகங்களுக்கும் போட்டிகள் குறித்த விபரங்கள் அடங்கிய சுற்றறிக்கையை கல்வி அமைச்சு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலை மாணவர்களிடையே வலய, மாகாண, தேசிய மட்டத்திலான போட்டிகள் நடாத்தப்படவுள்ளதோடு தரம்-4 தொடக்கம் உயர்தரம் வரையிலான மாணவர்கள் இப்போட்டிகளில் பங்குபற்றலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மட்டப் போட்டிகள் எதிர்வரும் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் நடாத்தப்படவுள்ள நிலையில், வலய மட்டப் போட்டிகள் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பதாகவும் மாகாண மட்டப் போட்டிகள் ஜூலை 19 ஆம் திகதிக்கு முன்னர் நடாத்தப்பட வேண்டும் என்றும் கல்வி அமைச்சின் தமிழ்ப் பிரிவு அறிவித்துள்ளது. அதே வேளை, தேசியமட்ட போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் ஜூலை 31 ஆம் திகதிக்கு முன்னர் கல்வியமைச்சுக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Vijey விஜய்
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
பெக்ஸ்: 2479688

## பாடசாலை செல்லும்
# பெண்பிள்ளைகளுக்கு நாளொன்றுக்கு ஒரு ரூபாய்



இந்தியாவின் வர்த்தகத் தலைநகரமாக விளங்கும் மும்பையில் பாடசாலை செல்லும் பெண்பிள்ளைகளுக்கு நாளொன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் வழங்க மும்பை நகர சபை தீர்மானித்துள்ளது.

இரண்டு பிரதான குறிக்கோள்களை மையமாக வைத்து இத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. அதாவது தினமும் பாடசாலை வரும் மாணவிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் பெண்பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் கூடிய அதிகாரத்தை வழங்கும் நோக்கங்களை அடிப்படையாகவைத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

பொதுவாக, இந்தியாவில் பெண்பிள்ளைகளை விட ஆண்பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. அதனால், பெண்பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளும் அதிலான ஆர்வங்களும் குறைந்துள்ளன. இந்நிலையை மாற்றியமைத்து பாடசாலைக்குச் செல்லும் பெண் பிள்ளைகளின் வரவை ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்டு அவர்களுக்கு ஒரு நாளைக்கு ஒரு ரூபாவைச் செலுத்த அதிகாரிகள் முயற்சிக்கின்றனர். இதுவரை மும்பை நகர அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் 220,000 மாணவிகள் ஊக்குவிப்புத் தொகையைப் பெறுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# உலகின் வேகமான மோட்டார் வாகனம்

நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் மனித தேவைகளில் போக்குவரத்துச் சேவையும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. எதையும் வேகமாகச் சாதிக்க நினைக்கும் மனிதனுக்கு அந்தத் தேவையை நிறைவேற்ற வேண்டிய நிலையில் இலகுவழி போக்குவரத்துச் சாதனங்களும் உற்பத்தி செய்யப்படாமலில்லை. பல்லக்கில் ஆரம்பித்து மாட்டுவண்டி, குதிரை வண்டி, ரிக்ஷா, சைக்கிள், மோட்டார் சைக்கிள், பஸ், கார், விமானம் என ஆரம்பித்த போக்குவரத்துப் புரட்சி இன்றளவில் சுப்பர் சொனிக் விமானம், இலத்திரனியல் ரெயில், நீர்மூழ்கிக்கார் என்ற சீரான முன்னேற்றப் படிமுறைகளைத் தாண்டிச் சென்று கொண்டிருக்கிறது. இவையனைத்தும் போக்குவரத்துச் சாதனங்களில் ஏற்பட்ட முன்னேற்றத்திற்கு சிறந்த சான்றுகளாகும்.



இதே நிலையில், உலகிலேயே வேகமாகப் பயணிக்கக்கூடிய மோட்டார் வாகனத்தை பல மோட்டார் நிறுவனங்களும் உற்பத்தி செய்து வருகின்றன. எனினும், இன்றளவில் உலகில் வேகமான மோட்டார் வாகனத்தை ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனமொன்றே உற்பத்தி செய்துள்ளது. Saleen S7, Twin Turbo எனப் பெயரிடப்பட்டுள்ள இம்மோட்டார் வாகனம் மணிக்கு 260 மைல் வேகத்தில் பயணிக்கக்கூடியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மோட்டார் வாகனம் சுமார் 6 லட்சம் அமெரிக்க டொலர் பெறுமதி வாய்ந்தது.



Saleen S7, Twin Turbo

உலகிலேயே வேகமாகச் செல்லக்கூடிய மோட்டார் வாகனங்களின் தர வரிசையில் 'கொஇனிக்ஸெக்' (Koenigsegg CCR) ரக மோட்டார் வாகனம் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. இதனை 'மர்சிட்ஸ் பென்ஸ்' நிறுவனம் தயாரித்துள்ளது. இது மணிக்கு 242 மைல் வேகத்தில் பயணிக்கக்கூடியது.



Koenigsegg CCR

இதேவேளை, Ultima-can ரக மோட்டார் வாகனங்கள் மணிக்கு 231 மைல் வேகத்தில் பயணிக்கக்கூடியன. இவை வேகமாக பயணிக்கக்கூடிய மோட்டார் வாகன தர வரிசையில் மூன்றாவது இடத்தை வகிக்கின்றன.

அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இளைஞர்கள் மத்தியில் இந்த வேகமாகப் பயணிக்கும் மோட்டார் வாகனங்களுக்கு அதிக கிராக்கி நிலவுகின்றது. எனினும், இவற்றை விநோத பயணங்களுக்காகப் பயன்படுத்த முடியாதுள்ளன. காரணம், இவற்றின் வேகத்திற்கு ஏற்றவகையிலான போக்குவரத்துப் பாதைகள் எல்லா இடங்களிலும் சீரான நிலையில் இல்லாதிருப்பதனாலாகும். எவ்வாறாயினும், அமெரிக்கா, ஜேர்மனி மற்றும் இத்தாலி போன்ற பல ஐரோப்பிய நாடுகளிலும் இந்த ரக வாகனங்கள் பயணிப்பதற்கென்றே வேறு போக்குவரத்துப் பாதைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.



Ultima-can

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனித நேயப்பணிகளில் மனந்தளராது செயல்படும் செஞ்சிலுவைச் சங்கம்

இன்று உலகின் பல்வேறு நாடுகளிலும் யுத்தங்கள், மோதல்களினால் பலர் உயிரிழந்தும், ஊனமுற்றும், இன்னும் பல்வேறு சொல்லொணா துயரங்களுக்கு முகம் கொடுத்தும் வருகின்றனர். இவை தவிர, இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படுவோர் பல கோடி பேர்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் இன, மத, குல பேதமின்றி மனித சமூகத்துக்குப் பாரிய அளவில் சேவையாற்றும் உலக செஞ்சிலுவைச் சங்கத்திற்கு வருடத்தில் ஒரு தினம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதுதான் செஞ்சிலுவைச் சங்கத்தின் தாபகரான ஹென்றி டுனாட் அவர்களின் பிறந்த தினமாகிய மே மாதம் 08 ஆம் நாள் அனுஷ்டிக்கப்படும் 'உலக செஞ்சிலுவை' தினமாகும்.

மே.ஐரோப்பாவின் சுவிற்சர்லாந்து நாட்டில் உள்ள ஜெனீவாவில் பெருஞ்செல்வந்தர் குடும்பத்தில் 1828 மே மாதம் 8 ஆம் திகதி பிறந்தார் ஹென்றி டுனான்ட். இவர் ஒரு சிறந்த வர்த்தகர். தனது வர்த்தக நடவடிக்கையை விஸ்தரிக்கும் பொருட்டு பிரான்ஸ் நாட்டின் சக்கரவர்த்தியை சந்திக்கச் சென்றார். அன்றைய தினம் பிரான்ஸுக்கும் ஆஸ்திரியாவுக்கும் இடையில் கடும் யுத்தம் நடைபெற்றதால் அவரால் சக்கரவர்த்தியை சந்திக்க முடியவில்லை. தனது நோக்கம் நிறைவேறும் வரை சொல்பரினோ நகரில் தங்கி இருந்தார். இந்த யுத்தத்தில் 40,000 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். மேலும், ஏறக்குறைய 40,000 பேர் காயமடைந்தனர். ஹென்றி டுனான்ட் காயமடைந்த போர் வீரர்களின் துயரங்களையும் வேதனைகளையும் நேரில் கண்ணுற்றார். அவர்கள் மீது இரக்கம் கொண்டார். அவர்களுக்கு உதவ முன்வந்தார். போரில் சம்பந்தப்பட்ட இரு நாட்டு மக்களின் உதவியைப் பெற்றதோடு அவ்விரு நாடுகளான ஆஸ்திரியா, பிரான்ஸ் போர் வீரர்களின் காயங்களுக்கு சிகிச்சை அளித்து அவர்களின் வீடுகளுக்குத் தகவல் தெரிவித்து தன்னால் முடிந்த உச்ச சேவைகளைச் செய்தார்.

## துயரத்தைப் பகிரும் நூல்

பின்னர் சுவிற்சர்லாந்து திரும்பிய ஹென்றி டுனான்ட் அவர்களால்

ஹென்றி டுனான்ட் அவர்களால் தனது வர்த்தக நடவடிக்கைகளை வெற்றிகரமாக தொடர்ந்து கொண்டு செல்ல நேரம் கிடைக்கவில்லை. தனது முழுப்பணத்தையும் செல்வத்தையும், காணி உள்ளிட்ட பல்வேறு சொத்துக்களையும் இழந்த ஹென்றி டுனான்ட், இறுதியில் ஹேடின் எனும் குக் கிராமத்தில் இருந்து நோய்வாய்ப்பட்டு மிகவும் துன்பப்பட்டார். இதனை செய்தியாளர் ஒருவர் எப்படியோ கண்டுபிடித்து அவரை நேர்கண்டு பிரசுரித்தமையால் மக்கள் அவரைப் பாராட்டியதோடு மட்டுமில்லாமல் அவருக்கு அந்தக் காயமடைந்தவர்களை மறக்கவே முடியவில்லை. அதனால், 1862 இல் A Memory of Salfarinove 'சொல்பரினோவின் நினைவுகள்' என்ற நூலை எழுதி தனது சொந்தச் செலவிலேயே அச்சிட்டு வெளியிட்டார். இந்நூலில் பல அரிய மனித நேயக் கருத்துக்களும் முன் வைக்கப்பட்டன. இதனை வாசித்த பலர் அவருக்குத் தமது பேராதரவை நல்கினர்.









## செஞ்சிலுவைச் சங்கத்தின் தோற்றம்

உலகின் முதலாவது நிவாரணக் குழு எனப் புகழப்படும் இந்த அமைப்பு 1863 ஒக்டோபரில் ஆயிரம் அரச பிரதிநிதிகளுடன் ஜெனீவா நகரில் கருத்தரங்கொன்றை நடாத்தியது. அக்கருத்தரங்கில் வெள்ளை நிறப் பின்னணியில் செந்நிறச் சிலுவையானது அந்த அமைப்பின் சின்னமாக அங்கீகரிக்கப்பட்டது. அன்று முதல் 'செஞ்சிலுவைச் சமூகம்' என அக் குழு அழைக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்கம் மிக அதிகமான பொறுப்புக்களைக் கொண்ட அமைப்பாக இருந்தமையால் பல வழிகளிலும் உதவி புரிந்தனர்.

## செஞ்சிலுவைச் சின்னம்

சுவிற்சர்லாந்தை அடிப்படையாக வைத்தே இச்சங்கத்தின் சின்னமான செஞ்சிலுவையைத் தெரிவு செய்தனர். எக்காரணம் கொண்டும் மத அடிப்படையில் இச்சின்னம் தெரிவு செய்யப்படவில்லை. 1876 இல் ரஷ்ய-துருக்கி யுத்தத்தின் போது காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளித்த 'ஓட்டோமன் சங்கம்' செஞ்சிலுவைக்குப் பதிலாக செம்பிறையை சின்னமாக பயன்படுத்தியது. அதனைத் தொடர்ந்து இஸ்லாமிய நாடுகள் அனைத்தும் தமது மதத்தை அடிப்படையாக வைத்து செம்பிறைச் சின்னத்தைப் பயன்படுத்துகின்றன. எனினும், செஞ்சிலுவையும் செம்பிறையும் ஒரே சேவையையே வழங்குகின்றன.

## ஏழு கொள்கைகள்

1. மனிதாபிமானம்
2. பக்கச்சார்பின்மை
3. சுதந்திர நிலைப்பாடு
4. நீதியான நடுநிலை
5. தன்னார்வ சேவை
6. ஐக்கியத் தன்மை
7. உலகளாவிய சேவை

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வரலாறு

1936 இல் பிரித்தானிய செஞ்சிலுவைச் சங்க இலங்கை மத்திய கிளை என்ற பெயரிலேயே இலங்கையில் செஞ்சிலுவைச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. சுதந்திரத்தின் பின் புதிய யாப்பின் மூலம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் என பெயர் மாற்றம் பெற்றது. 1952 இல் அது தேசிய சங்கமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1972 இல் 'ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கம்' எனப் பெயர் மாற்றம் பெற்றது. 1980 இல் சமூக சேவை சட்டத்தின் கீழ் சமூக சேவை அமைப்பாக பதிவு செய்யப்பட்டது. 2002 இல் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் புதிய யாப்பு நிறைவேற்றப்பட்டதோடு முகாமைத்துவத்தினதும் நிர்வாக சபையினதும் பொறுப்புக்கள் பிரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

ப.இரஞ்சித் ஜெயகர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வானம் ஏன் நீலநிறம்?


வானம் நீல நிறமென்பது வெளிப்படையானஉண்மை. ஆனாலும் வானம் ஏன் நீல நிறத்தில் காணப்படுகின்றதென நீங்கள் எப்போதாவது எண்ணியதுண்டா? அறிவாளிகள் பலரும் இதுபற்றியோசித்தனராயினும் அதற்கான காரணத்தைக் கண்டறிவதற்கு அதிக நாட்கள் எடுத்ததாம்.

சூரியனிலிருந்து வரும் ஒளியானது வெள்ளை நிறமுடையதாகவே எமது கண்களுக்குத் தோன்றுகிறது. ஆனாலும், அது வானவில்லில் காணப்படும் அத்தனை நிறங்களாலும்ஆக்கப்பட்டதென்பது மிக அடிப்படையான உண்மையாகும்.

'அரியம்' என்பது விசேட வடிவத்தையுடைய ஒரு பளிங்காகும். இந்த அரியத்தினூடாக வெள்ளொளிக் கற்றையொன்று செலுத்தப்படும்போது, அவ்வெள்ளொளி அதன் அத்தனை நிறங்களிலும் நிறப்பிரிகை அடைவதை அவதானிக்கலாம்.

நாம் பூமியில் பார்க்கும் ஒளியானது, பிரபஞ்சத்தில் காணப்படும் ஒளிச்சக்தியின் ஒரு சிறிய பகுதியே. சமுத்திரங்களினூடாக சக்தி பாய்வதைப் போல, ஒளிச்சக்தியும் அலைகளாகப் பயணம் செய்கின்றது. ஒரு சில ஒளியலைகள் வேகமாகப் பயணிக்கும் அதேவேளை, இன்னும் சில ஒளி அலைகள் மிகவும் மெதுவாகவே பயணிக்கின்றன.

சிவப்பு ஒளி அலைகளைக் காட்டிலும் நீல ஒளியலைகள் சிறியனவாகும். அனைத்து ஒளியலைகளும் நேராகவே பயணம் செய்கின்றன.



ஆனால், அவை பயணிக்கும் பாதையில் ஏதாவது பொருள் காணப்பட்டால் சில மாற்றங்களுக்கு அவை உட்படும். ஒளி செல்லும் பாதையில் கண்ணாடி இருந்தால் தெறிப்படையும்; அரியம் இருந்தால் ஒளி முறிவடையும்; தூசு துணிக்கைகள் காணப்பட்டால் பரவலடையும்.

சூரிய ஒளியானது பூமிக்கு வந்தடையும் அதேவேளை, அது வளிமண்டலத்தில் காணப்படும் வாயுக்கள் மற்றும் துணிக்கைகள் காரணமாக பரவல் அடைகின்றது. பூமியின் வளிமண்டலத்தில் காணப்படும் நுண்ணிய மூலக்கூறுகளிடையே வரும் நீல ஒளி எல்லாப்பக்கமும் பரவலடைகிறது. ஏனைய நிற அலைகளை விட நீல ஒளி அலை அதிகளவில் பரவலடைகிறது. இதற்கு நீல ஒளியலையின் குறுகிய அலையும் வேகமான பயணமும் காரணமாகும்.




## பலதும் பத்தும்

✱ சுயாதீனமாக விண்வெளியில் அசையும் எந்தத் திரவத்துளியும் கோளவடிவத்தையே பெற்றுக்கொள்ளும். இதற்கு அத்திரவத்தின் மேற்பரப்பில் உள்ள இழுவிசையே காரணமாகும்.

✱ புதன், வெள்ளி, பூமி மற்றும் செவ்வாய் ஆகிய கோள்கள் சூரியனுக்கு அருகாமையில் அமைந்துள்ளதால், அவை 'உள்ளகக் கோள்கள்' என்ற விசேட பதம் கொண்டு அழைக்கப்படுகின்றன.



✱ ஒரு செக்கனுக்கு ஒரு நட்சத்திரம் என்ற விகிதத்தில் வானில் காணப்படும் நட்சத்திரங்களை நீங்கள் எண்ணிக் கணக்கெடுக்க முயற்சித்தால், அத்தனை நட்சத்திரங்களையும் உங்களால் கணக்கிகெடுக்க சுமார் 3,000 வருடங்கள் பிடிக்கும்.

✱ பிரித்தானியாவால் விண்வெளிக்கு விடுவிக்கப்பட்டுள்ள ஒரேயொரு செய்மதியின் பெயர் என்ன தெரியுமா? 'கறுப்பு அம்புக்குறி' என்பதாகும். அதனை ஆங்கிலத்தில் 'Black Arrow' என்று அழைப்பர்.

✱ நிலவுக்கு முதலில் சென்று அங்கு காலடி வைத்தவர் யாரென்று உங்களிடம் கேட்டால், நீங்கள் முந்திக் கொண்டு நீல் ஆம்ஸ்ட்ரோங் எனப் பதில் கூறுவீர்கள். நீல் ஆம்ஸ்ட்ரோங் சந்திரனில் காலடி வைக்கும்போது, இடது காலைத்தான் முதலாவதாக வைத்தார்.

✱ திருமணமான ஜோடிகளான Jan Davis மற்றும் Mark lee ஆகியோரே முதன்முதலில் விண்வெளிக்குச் சென்ற ஜோடிகளாவர். இவர்கள் 1992 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 12 ஆம் திகதி Endeavour விண்ணோடத்தில் விண்வெளிக்குச் சென்றார்கள்.

✱ விண்வெளியிலிருந்து கொண்டிருக்கும்போது நீங்கள் எவ்வளவுதான் சத்தம் போட்டாலும் உங்கள் அருகில் உள்ளவரால் நீங்கள் சத்தமிடுவதைக் கேட்க முடியாது.

✱ மணிக்கூட்டு முள் சுற்றும் திசையில் வலம் வரக்கூடிய ஒரேயொரு கிரகம் வெள்ளியாகும்.

# சனிக்கிரகத்தின் வளையங்கள்

சனிக்கிரகத்தை சூழ்ந்து காணப்படும் ஏழு வளையங்களையும் விஞ்ஞானிகள் அவர்களின் சௌகரியத்திற்காக A, B, C, D, E, F, G என்ற ஆங்கில அகரவரிசை எழுத்துக்களால் குறிப்பிடுகின்றனர். இந்த வளையங்களில் F என்ற வளையமே மிகவும் சிறியதாகும். இதன் அகலம் 48 கிலோமீற்றராகும். E என்ற வளையமே மிகப் பெரிய வளையமாவதோடு, இதன் அகலம் 302,557 கிலோமீற்றர்களாகவும் இருக்கின்றது. இந்த வளையங்கள் சனிக்கிரகத்தின் ஒன்று அல்லது பல சந்திரன்கள் அழிந்ததால் உண்டான எச்சங்களிலிருந்து தோன்றியிருக்கலாமென நம்பப்படுகிறது. இந்த வளையங்கள் தொடர்ச்சியாக நிலைத்திருப்பதற்கு சனிக்கிரகத்தின் சந்திரன்களுக்கும் சனிக்கிரகத்திற்குமிடையான



ஈர்ப்புச் சக்தியே காரணமாகுமெனவும் நம்பப்படுகிறது.

இந்த வளையங்கள் தொடர்பான புரட்சிகரமான கண்டுபிடிப்புகளை மேற்கொள்ளவே 'கெசினி' விண்வெளியோடம் விண்ணுக்கு ஏவப்பட்டுள்ளது. இதேவேளை, இந்த வளையங்களுக்கிடையே செயற்படுத்தப்பட்ட நிலையில் ஒட்சிசன் காணப்படுவதாகக் 'கெசினி' கண்டறிந்துள்ளது. இந்த செயற்பாட்டு ஒட்சிசன் மூலக்கூறினால் சனிக்கிரக வளையங்கள், வரிதாக்கத்திற்கு உட்படுவதாக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

சனிக்கிரகத்தின் வளையங்களுக்குள்ளே அமைந்திருக்கும் 18 சந்திரன்கள் இதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சனிக்கிரகச் சந்திரன்களில் Titan என்ற சந்திரனே மிகவும் விசாலமானது.

## விளம்பரம் கண்டு விண்வெளி சென்றவர்

**"விண்வெளி வீரர்கள் தேவை-எந்தவித அனுபவமும் தேவையில்லை" இது 1991 ஆம் ஆண்டு வானொலியில் ஒலிபரப்பப்பட்ட ஒரு விளம்பரமாகும். Mars சொக்லட் கம்பனியில் இரசாயனவியலாளராக கடமையாற்றிய செல்வி Helen Sharman தனது காரில் பயணித்துக் கொண்டிருக்கும்போது, இந்த விளம்பரத்தை தனது காரின் வானொலியில் ஒலிக்கக் கேட்டார். உடனே அதற்கு அவர் விண்ணப்பித்தார்.**



**ரஷ்யா விண்வெளிப் பயணத்தில் இணைந்து கொள்ளும் நபராகவும் விண்ணுக்கு ஏகும் முதலாவது பிரித்தானியராகவும் குறித்த விளம்பரத்திற்கு வந்த 13,000 விண்ணப்பங்களிலிருந்து Sharman தெரிவு செய்யப்பட்டார். தனது 27 ஆவது வயதில் விண்வெளிக்குச் செல்லும் அபூர்வமான வாய்ப்பைப் பெற்றுக் கொண்ட உறுதிமிக்க பெண் Sharman. இவர் விண்வெளிக்கு ஏகி எதிர்வரும் 18 ஆம் திகதியுடன் சரியாக 17 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன.**

**18 மாதங்கள், ரஷ்யாவின் மொஸ்கோவிற்கு வடகிழக்காக அமைந்துள்ள Star Cityஇல் பயிற்சிகளைப் பெற்றதன் பின்னரே Sharman விண்வெளிக்கான தனது பயணத்தை ஆரம்பித்தார். ஏழு நாட்கள் விண்வெளியில் தங்கியிருந்து ஆராய்ச்சிகளை மேற்கொண்டதன் பின்னர், Soyuz TM11 என்ற விண்ணோடம் மூலம் பூமியை வந்தடைந்தார்.**


தபால் மூல ஆங்கில பாடநெறி ENGLISH Course

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்தவாரே எம்முடன் இணைந்து ஆங்கிலத்தை சரளமாகவும் தெளிவாகவும் கற்றுக் கொள்ள முடியும்

* கிளாஸ் போகும் காலம் நேரம் மிகுதி / வீண் கட்டணங்கள் இல்லை
* குருகிய காலம் என்பதால் 1 மாதத்தில் பாடநெறியை முடிப்பதால் பயன் இல்லை
* அடிப்படையில் இருந்தே கற்றுக்கொடுக்கப்படும்

பாடநெறியில் இணையும் அனைவருக்கும் அழகிய பேக் ஒன்றும் Tigo Sim Card (தொலைபேசி இணைப்பு) ஒன்றும் வழங்கப்படும்

முதல் இணையும் 200 மாணவ/மாணவிகளுக்கு மாத்திரமே Tigo Sim ஒன்று இலவசம்

இந்த Diploma சான்றிதழ் உங்கள் கல்வித்துறை, மற்றும் தொழில் வாய்ப்புக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கு துணையாக அமையும்

மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 15/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்

UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. Tel: 0773 123 523

மாறாறு வழிகளிலோ, மறைமுகமான கட்டணங்களோ அறவிடப்படமாட்டாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாண் தயாரிப்பிற்கு தேவையான மூலப்பொருட்களை இயந்திரம் மூலம் கலக்கும் விதம்.



தயாரிக்கப்பட்ட மா கலவையை ஒவ்வொரு பாண் அளவிற்கு வேறுபடுத்தும் இயந்திரத்தில் சேர்க்கும் சந்தர்ப்பம்.



பாணின் உருவத்தை ஏற்படுத்துவதற்கு உருவாக்கப்பட்டுள்ள தட்டுகளுக்கு மா கலவையை சேர்க்கும் விதம்.







பொங்கிய பாணை மின் வெதுப்பியினுள் அனுப்பும் விதம்.

# பாண் 2



அன்று முதல் இன்றுவரை பாணை வெதுப்புவதற்கென மக்களின் விருப்பத்திற்குரிய களிமண்ணால் ஆன சூளைகளைப் பயன்படுத்துகின்றனர். இயற்கையான முறைகளின்படி உற்பத்தியாகும் இத்தகைய சூளையினுள் முன்னேற்றகரமான தொழில்நுட்பத்தையும் காணலாம்.

கி.பி 1505 இல் போர்த்துக்கேயர் கொழும்பின் கரையோரப் பகுதிகளில் கப்பல்களின் மூலம் வந்து தரையிறங்கினர். இக்காட்சியைக் கண்ணுற்ற மக்கள் அப்போதைய கோட்டை மன்னனாகிய 8 ஆம் வீரபராக்கிரமபாகுவிடம் ஓடோடிச் சென்று பின்வருமாறு தெரிவித்தனர்.

"மன்னா! கூழாங்கற்களைச் சாப்பிட்டபடி இரத்தத்தைக் குடிக்கும் விசித்திரமனிதர்கள் நமது கடற்கரையில் இறங்கியுள்ளனர்" என்றனர். இன்று நாம் அவர்கள் உண்ட அந்தக் கூழாங்கற்களைப் பற்றியே அறியப் போகிறோம். அன்று சிங்கள மக்கள் பார்த்த அந்தக் கூழாங்கற்கள் வேறொன்றுமில்லை. இன்று நாம் பெரிதும் விரும்பி உண்ணும் 'பாண்' தான் அவை. அவர்களின் பார்வைக்கு போர்த்துக்கேயர் குடித்தது இரத்தமாக இருந்தாலும் உண்மையில் அது வைனாகும். அந்த வகையில் இன்றைய மக்கள் பெரிதும் விரும்பி உண்ணும் பாண் அன்று போர்த்துக்கேயரால்தான் அறிமுகப்படுத்தப்பட்டது.

பாணை உருவாக்குவதில் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள் ஐரோப்பியர்களே. இலங்கை, இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட ஆசிய வலய நாட்டு மக்களின் விருப்பத்திற்குரிய பிரதான உணவாக நெல் அரிசிச்சோறு விளங்குகின்றது. அத்துடன் தென், தென்கிழக்கு மற்றும் கிழக்காசிய நாடுகள் அனைத்தும் நெல் விவசாயத்திற்கு உகந்த காலநிலை, மண்வளம் என்பனவற்றைக் கொண்டு விளங்குகின்றன. அதேபோல் ஐரோப்பிய நாடுகளின் காலநிலை, மண்வளம் என்பன கோதுமை பயிர்ச்செய்கைக்கு மிகவும் உகந்ததாகும். அதனால், ஐரோப்பியரின் பிரதான பயிர்ச்செய்கையாக கோதுமை இருந்தது. கோதுமையும் அதிலிருந்து தயாரிக்கப்படும் உணவு வகைகளும் அவர்களின் பிரதான உணவுகளாக இருக்கின்றன. அந்த வகையில் கோதுமையில் இருந்து தயாரிக்கப்படும் பாண் அவர்களின் பிரதான உணவுகளில் ஒன்றாக இருந்தது.



பாண் தயாராகும் விதம் கோதுமை மா, மாஜரீன், சீனி, யீஸ்ட் போன்ற சகலமூலப் பொருட்களையும் ஒரு பாத்திரத்தில் இட்டு நன்றாகக் கலவை செய்ய வேண்டும். பாண் நன்றாக வெதும்புவதற்கு மிகவும் நன்றாக கலவை செய்ய வேண்டியது அவசியமாகும்.


அத்துடன், கோதுமை மாவில் 'க்ளுடன்' என அழைக்கப்படும் புரதம் அடங்கியுள்ளது. இந்த 'க்ளுடன்' பாணைச் சுற்றி வலைபோல் படியும்.உயர்ந்த தரத்திலுள்ள பாண் ஒன்றில் 25 முதல் 30% வரையிலான 'க்ளுடன்' அடங்கி இருக்கவேண்டும். எனினும், சாதாரண கோதுமை மாவில் போதிய அளவு 'க்ளுடன்' அடங்கியிருக்காததால் நவீன முறைப்படி பாணைத் தயாரிக்கும்பொழுது பாண் இம்ரோவர் எனப்படும் பொருளை (Bread Imrover) அளவுடன் பாண் கலவையுடன் ஒன்று சேர்ப்பர்.

நவீன முறையின்படி பாணைத் தயாரிக்கும் பொழுது அதனுடன் கலக்கும் பாண் 'இம்ரோவர்' குறித்து மக்களிடையே தவறான எண்ணங்கள் காணப்படுகின்றன. பாண் இம்ரோவரை சேர்க்கும்போது உடல் ஆரோக்கியத்திற்கு கேடு விளையும் என அவர்கள் கருதுகிறார்கள். எனினும், தரம் (Standard) உறுதி செய்யப்பட்ட இம்ரோவரினால் எவ்விதமான கேடும் விளையாது. எனினும், தரம் உறுதி செய்யப்படாத இம்ரோவரை சிலர் பயன்படுத்தலாம். அதனால், வர்த்தக நிலையங்களில் பாணை வாங்கும் பொழுது அதன் தரம் குறித்து கவனம் செலுத்தவேண்டும்.

## பாண் பொங்குவதன் காரணம் என்ன?

பாண் கலவையுடன் சேர்க்கும் சீனியும் யீஸ்ட்டும் பாண் பொங்கி வருவதற்கு முக்கிய காரணமாக அமைகின்றன. அதில் உற்பத்தியாகும் காபனிரொக்சைட் வாயுவினால்தான் பாண் கலவையானது வெதும்பும்பொழுது பொங்கி வருகின்றது.

பாண் கலவையை தயாரித்த பின் ஒரு பாணுக்குத் தேவையான அளவு கலவையை எடுத்து மா உருண்டைகளாக்குவர். இவ்வாறுகலவையை மா உருண்டைகளாக வேறுபடுத்தி வைப்பர். நவீன முறையின்படி அந்த மா கலவை உருண்டையை செவ்வக உருவ அமைப்பு அறையினுள் உள்ள வெப்பத்தில் அதற்கென விசேடமாக உருவாக்கப்பட்ட அறை போன்ற இயந்திரத்தினுள் சிறிது நேரம் வைப்பர்.



## பாணை வெதுப்பும் (பேக்) முறை

கடந்த காலங்களிலும் நிகழ்காலத்திலும் அதிகமாக பாணை வெதுப்புவதற்கு 'களிமண் போரணை' அல்லது களிமண் சூளைகள் பயன்படுத்தப்பட்டன. ஆனால், நவீன முறைப்படி பாணை வெதுப்புவதற்கு விசேடமாக உருவாக்கப்பட்ட அடுப்புகள் (Oven) சூளைகள் உருவாகிவிட்டன.



## பாண் சூளை

அக்காலத்திலிருந்து இன்றுவரை பாண் வெதுப்புவதற்கு களிமண் சூளைகளே பலராலும் விரும்பிப் பயன்படுத்தப்படுகின்றன. இயற்கையான முறையில் உருவாக்கப்படும் இத்தகைய சூளையினுள் முன்னேற்றகரமான தொழில்நுட்பத்தை காணலாம். அடுப்பினுள் உள்ள வெப்பத்தின் மூலமாக பாணை வெதும்ப வைப்பதே சூளையின் பிரதான செயல்பாடாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மின் வெதுப்பியில் பாண் வெதும்பும் விதம்.



வெதும்பிய பாண்.



வெதும்பிய பாணை வெதுப்பியிலிருந்து வெளியே எடுக்கின்றனர்.



பல்வகை பாண்களும் ஏனைய உணவுப் பொருட்களும் விநியோகிக்க தயார் நிலையில்.



வர்த்தக நிலையங்களுக்கு கொண்டு செல்லத் தயார் நிலையில் உள்ள வாகனங்கள்.

# ...ருவாகும் விதம்



அதனால், சூளையினுள் வெப்பத்தை தக்க வைத்துக்கொள்ள பல்வேறு உபாயங்களைப் பயன் படுத்துகின்றனர்.

இதில் கீழே அமைந்துள்ள தட்டில் கருங்கல்லும் அதற்கு மேல் கண்ணாடித் தட்டும் உப்புத்தட்டும் கொண்டு அடியிலிருந்து சூளையைக் கட்டி எழுப்புவர். உப்பு, கண்ணாடித் துண்டுத் தட்டுகளுக்கு மேல் மீண்டும் உப்பு மாத்திரமுள்ள தட்டு ஒன்றும் அதற்கு மேல் களிமண் தட்டு ஒன்றும் அமைப்பர். சூளை அடிப்பகுதி இவ்வாறுதான் கட்டி எழுப்பப்படும்.

அதன்பின் வளைந்த வடிவத்தில் தென்னம் பலகையால் கட்டி அந்த வளைந்த வடிவத்திற்கு ஏற்ற விதத்தில் களிமண்ணைப் பூசி அந்த வடிவத்தை எடுப்பர். பின்னர் இந்த சகல தட்டுகளையும் மூடியபடி (Cover) செங்கற்களால் சுவர் எழுப்பப் படும். சுவர் காய்ந்தபின் தென்னம் பலகை நீக்கப்படும். களி, கருங்கல், உப்பு, கண்ணாடித் துண்டுகள் போன்ற பல்வேறு வகை சூளைகளைச் செய்து கொள்வதற்கு காரணம் சூளையினுள் உள்ள வெப்பம் வெளியே செல்லாமல் தடுப்பதற்காகும்.

செங்கற்களால் சுவர்களைக் கட்டும்பொழுது வளைவு வடிவத்தில் கட்டப்பட்ட பகுதியில் கதவொன்றை வைப்பது அத்தியாவசியமாகும். இந்தக் கதவு வழியே தான் பாணை அடுப்பினுள் செலுத்துவர்.

இக்கதவு வழியாக அடுப்பினுள் விறகுக் குற்றிகளைச் செலுத்தி அவை நன்றாக எரிந்து கரியாகும் வரை எரியவிடப்படும். அதன்பின் சகல கரியையும் வெளியேற்றியபின் சூளையினுள் பாணைச் செலுத்தி வெதுப்பவேண்டும்.

## தரத்தில் உயர்ந்த பாண்

நாம் கடைகளில்



வாங்கும் பாண் சரியான தரத்திலும் உயர் நிலையிலும் இருக்கின்றதா? என அவதானிக்க வேண்டும். அது நமது உடல் ஆரோக்கியத்திற்கு இன்றியமையாததாகும். நவீன முறைப்படி பாணை தயாரிக்கும்பொழுது தரக் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் மூலம் அவற்றிற்கு தரச் சான்றிதழ் பெற்றுக் கொடுக்கப்படும். இலங்கையில் இது வரை காலத்தில் சர்வதேச நிலைக்கு சமனான நற்சான்றிதழைப் பெற்ற ஒரேயொரு பாண் உற்பத்தி நிறுவனமாக 'பிளகல்' நிறுவனம் திகழ்கின்றது. 'பிளகல்' நிறுவனம் பாண் உற்பத்திக்காக ISO 9001-2000 எனும் சர்வதேச தரச் சான்றிதழைப் பெற்றுள்ளது.

[illegible] அனைத்தும் இறாத்தல் முறையிலேயே இருக்கின்றன. இதன்படி ஒரு இறாத்தல் அல்லது 450 கிராம் எடை இருக்கவேண்டும். எனினும், 450 கிராம் எடையில் விற்பனைக்கு இடப்பட்டால் நட்டம் ஏற்படும் என்ற காரணத்திற்காக பாணை உற்பத்தி செய்வோர் 300 கிராம் வரை எடையைக் குறைத்து விற்பனை செய்கிறார்கள். அதனால், நாம் ஒரு இறாத்தல் பாணின் நிறை 450 கிராம் வரை இருக்கின்றதா? என பரீட்சித்துப் பார்த்து சரியான நிறையுள்ள பாணை இனங்கண்டு வாங்க வேண்டும்.

அதேபோல் நன்றாக வெதும்பிய பாணை நன்றாக அழுத்தினாலும் மீண்டும் முன்பிருந்தது போல் பொங்கி பெரிதாகிவிடும். மேலும் பாணின் ஒவ்வொரு துண்டுகளிலும் சமனான முறையில் துவாரம் அல்லது வாயு குமிழ்கள் எல்லா இடமும் பரவிக் காணப்பட்டால் அது தரத்தில் சிறந்த பாண் என்பதற்கு அடையாளமாகும்.

## பாணில் வேறு தயாரிப்புகள்

பாண் தயாரிக்கும் பொழுது இடையில் வெதுப்பக (பேக்கரி) உரிமையாளர்கள் பாண் தயாரிக்கப்படும் மாகலவையை பயன்படுத்தி மேலும் பல்வேறு வகையான உணவு வகைகளை த்யார் செய்கின்றனர். பனிஸ், பேஸ்ட்ரி வகைகள் போன்ற பல்வேறு வகையான உணவுப் பொருட்கள் குறிப்பிடத்தக்கவை. பாணுக்கு பயன்படுத்தப்படும் அதே பொருட்களை பயன்படுத்துவதோடு அந்தந்த உணவுப் பொருட்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களின் அளவு மாத்திரம் வேறுபடும்.

## ருசியின் ரகசியம்

சகல வெதுப்பக (Bakery) உரிமையாளர்களும் அவர்களுக்கென தனித்துவமான ருசியுடன் கூடிய பாண்களையும் அதனுடன் சம்பந்தப்பட்ட வேறு பல உணவுப் பொருட்களையும் தயாரிப்பர். இக்காரணத்தினால் தான் ஒவ்வொரு வெதுப்பகத்திலும் (பேக்கரியில்) நாம் வாங்கும் பாணின் ருசியானது மாறுபட்டுக் காணப்படுகிறது.

### பாண் இம்ரோவரில் அடங்கியுள்ளவை

- கோதுமை மா
- சோயா மா
- Sodium stearoyl laltyate (SSL)
- Diacetyl Trataric Acid Esteret Mono-Diglyserides
- Ascorbic Acid (விற்றமின் C) மாவின் தரத்தை உயர்த்த
- Funal Enzyme
- Calcium Charbonate
- L-Cysteine - மாவின் தரத்தை உயர்த்தும் பொருட்டு

### பாணில் அடங்கி உள்ளவை

- கோதுமை மா
- மாஜரீன்
- சீனி
- யீஸ்ட்
- உப்பு
- பால் மா
- பாண் இம்ரோவர்
- ஐஸ் கட்டி
- ஐஸ் நீர் (குளிரூட்டப்பட்ட நீர்)

### உலகின் பிரபலமான பாண் வகைகள்

- சாதாரண பாண் (Sandwich Bread)
- ஆரோக்கிய பாண் (Health Bread)
- அரேபிய பாண் (Arabic Bread)
- பிரெஞ்ச் பாண் (French Bread)
- குளிரூட்டப்பட்ட மச்சத்துடன் கூடிய பாண் (Fancy Bread) இது ஐரோப்பியர்களின் கோடை காலத்து விருப்பத்திற்குரிய பாண் வகையாகும்.

ஒவ்வொரு பேக்கரி (வெதுப்பகம்) உரிமையாளர்களும் தத்தமது பாணின் ருசிகரத் தன்மையின் இரகசியத்தை மற்றொரு வெதுப்பக உரிமையாளருக்கு தெரிவிப்பதில்லை.

எனினும், எந்தவொரு உணவுப் பொருளாயினும் பாண் வகையாகினும் அதன் ருசியின் இரகசியமானது அதில் அடங்கியுள்ள மூலப் பொருட்களின் அளவையும் அதன் உயர் தரத்தைக் கொண்டே தீர்மானிக்கப்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இரஞ்சித் ஜெயகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகிங் வாசிகள்



வைகிங் வாசிகளின் ஆரம்ப வசிப்பிடம் ஸ்கன்டினேவியப் பகுதிகளில் உள்ள மலைப்பிரதேசக் காடுகள் ஆகும். இவர்களில் அதிகமானோர் கடற்கரையை அண்டிய பகுதிகளில் வாழ்ந்தனராயினும் இவர்களில் அநேகமானவர்களுக்கு பண்ணைகளும் விளைச்சல் தரும் நிலங்களும் இருந்திருக்கின்றன.

வைகிங் வாசிகளில் அனேகமானோர் கடல் கடந்த வியாபாரிகளாவர். மரத்தால் செய்யப்பட்ட படகில் இவர்கள் ஆறுகள், கால்வாய்கள் வாயிலாக ஐரோப்பாவிற்குள் வியாபாரத்திற்காக சென்று வந்தனர். அவ்வாறு செல்லும் வழியில் தற்செயலாக கருங்கடல் வாயிலாக மத்திய தரைப்பிரதேசத்திற்குள்ளும் நுழைந்தனர். இவர்களில் சிலர் கடல் கொள்ளைக்காரர்களாகவும் உள்ளனர். ஆனாலும், அனேகமானவர்கள் விவசாயம் செய்யும் பண்ணைவாசிகளாகவே இருந்துள்ளனர்.





இவர்களது ஆரம்ப வாழ்விடம் ஸ்கன்டினேவியாவின் மலைப்பாங்கான பிரதேசங்களாகும். ஆனாலும் நாளடைவில் மலைப்பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த வைகிங் இனத்தவர்கள் கரையோரப் பிரதேசங்களை வாழ்விடங்களாக்கிக் கொண்டனர். இவர்கள் பண்ணை விவசாயம் செய்வதில் நல்ல திறமை பெற்றிருந்தனர். பெரும்பாலானவர்களுக்கு ஒரு பண்ணையும் விவசாய நிலமும் சொந்தமாக இருந்தன.

அந்தப் பண்ணையில் பார்லி, சோளம், கோதுமை, ஓட்ஸ்போன்ற தானியங்களைப் பயிர் செய்தனர். அத்தோடு தேவையான மரக்கறி வகைகளையும் பயிரிட்டனர். கால்நடை வளர்ப்பும் இவர்களது முக்கிய தொழிலாக இருந்துள்ளது. மேலதிகமாக உணவுத் தேவைக்காக ஆறுகள், நதிகள், நீர் நிலைகளில் மீன் பிடிப்பதையும் தொழிலாகச் செய்து வந்தனர். இவர்கள் வாழும் பகுதியில் இருந்து மரத்தால் செய்யப்பட்ட படகுகள் மூலம் சுவீடன் டென்மார்க்கின் கொபன்ஹெகன் ஆகிய பகுதிகளுக்கு வியாபாரத்திற்காகப் புறப்பட்டனர்.

சுறா மீன்களின் பற்கள், மான் கொம்பு, அவற்றின் தோல் போன்றவற்றால் செய்யப்பட்ட ஆடைகள், அலங்காரப் பொருட்கள் ஆகியவற்றை வியாபாரப் பொருட்களாக எடுத்துச் சென்றனர். அநேகமாக அவர்களிடையே நடைபெற்ற வியாபாரம் 'பண்டமாற்று' வியாபாரமாகவே அமைந்திருந்தது. அவர்களுக்குத் தேவைப்பட்ட துப்பாக்கிகள் அல்லது சுடுகலன்கள், பாத்திரங்கள், ஆபரணங்கள் போன்றவற்றைப் பெற்றுச் சென்றனர்.

இவர்களின் வசிப்பிடங்கள் மரம், கற்கள், களிமண்ணால் ஆன குடியிருப்புக்களாக இருந்தன. இந்த வீடுகளில் இருந்து வெளியேறும் புகை, வீட்டுக்குள் முடங்காமல் வெளியே செல்வதற்காக எல்லா வீடுகளிலும் மேல் நோக்கியதாக வெளியே தெரியும் வகையில் புகைக்கூடுகள் அமைக்கப்பட்டிருந்தன. இரவு நேரங்களில் பிரமாண்டமாகத் தீ மூட்டி அதனைச் சுற்றிலும் உட்கார்ந்து விளையாடுவது, கதை சொல்வது போன்றன இவர்களின் முக்கிய பொழுது போக்காகும்.

ஒற்றைக் கண்ணுள்ள 'டய்ன்' என்ற கடவுளை இவர்கள் வழிபட்டனர். இன்னும் சிலர் சம்மட்டியை வைத்து கடவுளின் சின்ன[illegible] கருதி வழிபட்டனர்.

வைகிங்வாசிகளிடம் உறுதியான தன்னம்பிக்கை காணப்பட்டது. இவர்களின் பண்ணைத் தொழிலின்போது அடிமைகள் வேலைக்குப் பயன்படுத்தப்பட்டனர். இவர்களின் குழுத்தலைவர் அதிக செல்வந்தராக இருந்ததோடு எல்லோரையும் விட கூடுதலான நிலத்தை உடையவராகவும் இருந்தார்.

இவர்கள் உழைப்பதில் ஒரு பகுதியை உல்லாசமாக பொழுதுபோக்குவதற்காகவும் களியாட்டங்களுக்காகவும் வணக்க வழிபாட்டு நிகழ்வுகளுக்காகவும் செலவிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இந்த கூட்டத்தாரிடையில் முரண்பாடுகள் ஏற்படும்போது வைகிங் வாசிகளின் மன்னர் தலையிட்டுத் தீர்த்து வைப்பார்.

விவசாயத்தால் இவர்கள் நல்ல செல்வச் செழிப்புடையவர்களாக இருந்தனர். கி.பி 700 ஆம் நூற்றாண்டளவில் வைகிங் வாசிகள் தமது பண்ணையை ஏனையவர்களுடன் சூதாட்டத்தில் முக்கிய பிணைப்பொருளாக பயன்படுத்தி மேலும் செல்வம் பெருக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அவர்களின் பிரதான விளையாட்டாக இத்தகைய சூதாட்டங்கள் இருந்தன. மல்யுத்தம், குதிரை விளையாட்டுக்கள், பனிச்சறுக்கல் என்பன பிரதான விளையாட்டுக்களாக இருந்தன.

இவர்களுக்கென்று தனியான நீதிமன்றம் ஒன்றும் இருந்தது. அந்த நீதிமன்றம் வருடாந்தம் குறிப்பிட்ட சில நாட்களில் கூடியது.

இரு தரப்பினரதும் கருத்துக்களுக்கு நேரடியாக செவிமடுத்து தீர்ப்புக்கள் வழங்கப்பட்டும் முரண்பாடுகள் தீர்த்தும் வைக்கப்பட்டன. ஆனாலும், நீதிமன்றத் தீர்ப்பை மீறுபவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படும் முறையும் பின்பற்றப்பட்டது.






அமீர் ஹுசைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## என்னுடைய ஆக்கம்....

உங்களோடு விளையாடி மகிழ செல்லம் கொஞ்ச சிறிய பூனைக் குட்டி ஒன்றை உங்களுக்கு நிர்மாணிக்கத் தெரியுமா ? தெரியாவிட்டால் நான் உங்களுக்கு சொல்லித் தருகிறேன்...

**தேவையான பொருட்கள்..**
4 செ.மீ. அகலத்தில் வட்டக் கடதாசி, 8 x 14 நீள் சதுரக் கடதாசி, பேனா, கத்தரிக்கோல், பசை




1. முதலில் வட்டக் கடதாசியில் பூனையின் முகம் ஒன்றை வரையுங்கள். B பகுதியை கோட்டினூடாக வெட்டுங்கள். இப்பொழுது புள்ளிக் கோட்டில் பின்புறமாக மடியுங்கள்.



2. A பகுதி இரண்டையும் B பகுதியை நோக்கி மேலே மடித்து பின் ஒட்டவும்.



3. ஓர் வட்டக் கடதாசியில் பூனையின் கைகள், வால் போன்றவற்றை இவ்வாறு வரைந்து கொள்ளுங்கள்.

4. இனி வரைந்ததை இவ்வாறு வெட்டி எடுத்துக் கொள்ளுங்கள்





5. 8 x 14 செ.மீ. நீள் சதுரக் கடதாசியை இவ்வாறு சிலிண்டர் போன்று சுருட்டி இரு முனைகளையும் ஒட்டிக் கொள்ளுங்கள்.



6. இப்பொழுது அந்த சுருளின் மேல் மற்றைய பகுதிகளையும் ஒட்டிக் கொள்ளுங்கள்.

போதுமான வரை விளையாடி மகிழ இப்பொழுது உங்களால் முடியும்....



ஞாபகம் தானே... விளையாடியதற்குப் பிறகு நன்றாக உங்களை சுத்தப் படுத்திக் கொள்ளுங்கள்

## சுள்புளியிடமிருந்து உங்கள் விபரப் புத்தகத்திற்கு.

நாங்கள் இன்று உலகின் புதிய ஏழு அதிசங்கள் எவை எவை என்று பார்ப்போம்...


சிட்சென் இட்சா பிரமிட் மெக்சிகோ


சீனப் பெருஞ்சுவர் சீனா


கிறைஸ்ட் ரிடீமர் பிறேசில்


ரோமன் கொலிசியம் இத்தாலி


தாஜ்மஹால் அக்ரா, இந்தியா




பெட்ரா – ஜோர்தான்


மச்சு பிச்சு – பேரு





இதுபோன்று அறிவையும் மகிழ்வையும் எடுத்துக்கொண்டு அடுத்த வாரமும் நான் உங்களைக் காண வருவேன்! அப்போது எங்களுக்கு கற்றுக்கொள்ளுவதுடன் விளையாடவும் முடியும்... நீங்[illegible]னே...





www.loweldbsuperbrand.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனாமா

**அழைக்கப்படும் பெயர்:** *பனாமா குடியரசு*
**கண்டம்:** *அமெரிக்கா*
**வலயம்:** *மத்திய அமெரிக்கா*
**எல்லை:** *வடக்கில் கரீபியன் கடலுக்கும் தெற்கில் பசுபிக் கடலுக்கும் கிழக்கில் கொலம்பியாவுக்கும் மேற்கில் கோஸ்டாரிகாவுக்கும் எல்லையாக பனாமா அமைந்துள்ளது.*






## தரைத்தோற்றம்


மத்திய அமெரிக்காவையும் தென் அமெரிக்காவையும் இணைக்கும் நாடாக பனாமாவை குறிப்பிடலாம். நிலப்பரப்பில் 1/3 பகுதி மழைக்காடுகளால் சூழப்பட்டுள்ளது. மொத்த நிலப் பரப்பு 75,517 ச.கிலோமீற்றரா கும். இதைத்தவிர, 200 மைல் கடல் வலயமும் பனாமாவுக்குச் சொந்தமானதாகும்.

நாட்டின் பிரதான தரைத்தோற்ற வலயமாக கிழக்கிலிருந்து மேற் காக நீண்டு செல்லும் மலைப் பகுதி திகழ்கின்றது. இந்த மலை களுக்கிடையே பிரதான போக்கு வரத்துப் பாதைகள் அமைந்துள் ளன. கரையோரத்தில் ஒன்றோ டொன்று தொடர்புடைய புகையி ரதப் பாதைகள் அமைக்கப்பட் டுள்ளன.

மேற்கு மலைப்பிரதேசம் 'கொர்டிலெரா' என அழைக்கப் படுகின்றது. இதுவே நாட்டின் மிக உயரமான மலைத்தொகுதி யாகும். அடர்ந்த மழைக் காடுகளை கிழக்கு பனாமா வில் காணலாம்.

பனாமாவின் கரையோரப் பிரதேசத்தில் பல குடாக்கள், வளைகுடாக்கள், கள்ப்புகள் காணப்படுவதோடு பல நதி களும் பாய்கின்றன. (ச்)சார் ஜர்ஸ் எனும் நதி நாட்டின் பிர தான நதியாகும்.






## காலநிலை

அதிகமான பகுதிகளில் வெப்ப காலநிலையே நிலவு கின்றது. எனினும், மலையக பிர தேசத்திலும் அதனை அண்டிய பிரதேசத்திலும் ஓர ளவு குளிர் கால நிலை நிலவுகின் றது.

மே முதல் டிசம்பர் வரையி லான காலகட்டத் தில் அதிக மழை வீழ்ச்சி கிடைக்கின் றது.



## தாவரமும் விலங்குகளும்

பனாமாவின் பெரிய வனாந் தரமாக 'டாரியேன்' காணப்படு கின்றது. நாட்டின் வடபகுதி முழுமையாகவே இவ்வனாந்த ரத்தைக் கொ டு காணப்படுகின் றது. இ கு 2000 வகைக்கு மேற் பட் வெப்பவலய தாவரங்கள் ..ப்படுகின்றன. இதனால் இவ் வலயமானது பல்வேறு விலங்கு களின் புகலிடமாக இருக்கின்றது.

## இயற்கை வளம்

விவசாயம் செய்யக்கூடிய மண் வளம் நிறைந்த பரந்த நிலப்பரப் பும் இயற்கைக் காடுகளும் நாட்டின் பிரதான வளமாகும். இவை தவிர, இரும்பு உருக்கு,செம்பு போன்ற கனிப்பொருட்களும் காணப்படு கின்றன.

## சனத்தொகை

பனாமாக் கால்வாயைச் சூழ்ந்த பிரதேசத்திலேயே அதிக சனத் தொகை காணப்படுகின்றது. ஸ்பா னியர்கள் பனாமாவை ஆக்கிரமித்த வுடன் சுதேசிகளுக்கிருந்த உரிமைகள் குறைந்து கொண்டே சென்றன. பிற்காலத்தில் உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து பெருந்தொகையானோர் பனாமா வில் குடியேறினர். இதனால், பல் வேறு இனக்குழுக்களும் இங்கு வாழ்கின்றன.

நாட்டின் மொத்த சனத்தொகை யில் 70% மானோர் 'மெஸ்டி சோஸ்க்கள்' ஆவர். இவர்கள் ஐரோப்பிய மற்றும் அமெரிக்க கலப்பின மக்களாவர். இவர்களைத் தவிர,கறுப்பின மக்களும் வெள்ளை இனமக்களும் சுதேச பிரி வினரும் இங்கு வாழ்கின்றனர்.

## மதமும் மொழியும்

அரச கருமமொழியாக ஸ்பானி யம் விளங்குகின்றது. மேலும், ஆங் கில மொழியும் பல சுதேச மொழி களும் பயன்படுத்தப்படுகின்றன.

நாட்டின் மொத்த சனத்தொகை யில் 77% மானோர் ரோமன் கத் தோலிக்க மதத்தைப் பின்பற்றுபவர் கள். எஞ்சியவர்கள் ஏனைய மதங் களைச் சேர்ந்தவர்கள்.

## கல்வி

நாட்டின் கல்வி அபிவிருத்திக்காக பனாமா அரசு பெருந்தொகைப் பணத்தைச் செலவழிக்கின்றது. இத னால், கல்வி கற்றவர்களின் தொகை அதிகமாக உள்ளது.

## பொருளாதாரம்

நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி யில் 80% மானது வர்த்தகத்துறை மூலமே கிடைக்கின்றது. பொருளா தாரத்தில் பனாமா கால்வாய் மிக முக்கிய தேவைகளைப் பூர்த்தி செய் கின்றது. 1999 ஆம் ஆண்டு முதல் பனாமா கால்வாய் இந்நாட்டுக்குச் சொந்தமானதன் பின் கப்பல் குத் தகை அறவிடும் அதிகாரம் பனாமா விற்குக் கிடைத்துள்ளது. பனாமா கால்வாய் மூலம் பெருந் தொகையான பனாமாவாசிகளுக்கு வேலை வாய்ப்புகள் கிடைத் துள்ளன. நாட்டின் மொத்த தேசிய வருமானத்தில் 10% மான வருமானம் இக் கால்வாய் மூலமே கிடைக் கின்றது.

**விவசாய உற்பத்தி:** வாழை, கோப்பி, நெல், இறைச்சி, காய்கறி

**கைத்தொழில் துறை:** கட்டடப்பொருள், பெற் றோலியம், பியர், சிமெந்து

**ஏற்றுமதிப் பொருட்கள்:** கோப்பி, வாழை, சீனி, தைத்த ஆடைகள்

**நாணயம்:** அமெரிக்க டொலர் (USD)

## போக்குவரத்தும் தொடர்பாடலும்

போக்குவரத்து பாதை களில் 35% ஆனவை நவீன போக்குவரத்து பாதைகளாகும். பல துறை முகங்களும் இங்குள்ளன. உலகிலேயே பெருந்தொ கையான வர்த்தகக் கப்பல் களைப் பதிவு செய்துள்ள நாடு பனாமாவேயாகும். இங்கு 6302 கப்பல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## நிர்வாகம்

நிறைவேற்று அதிகாரமு டையவராக ஜனாதிபதி விளங்குகிறார். தவிர, தேர் தல் மூலம் தெரிவு செய்யப் பட்ட இருவர் உபஜனாதிப தியாக உள்ளனர். 5 வரு டங்களுக்கு ஒருமுறை ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகின்றது.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகின் முதலாவது சலனப் புகைப்படம்







உலகிலேயே முதன்முதலாக அசையும் பொருளை புகைப் படமாக எடுக்கும் முயற்சி 1879 ஆம் ஆண்டுதான் சாத்தியமாயிற்று. குதிரையொன்று நபரொருவரைச் சுமந்து கொண்டு ஓடும்போதே இப் படம் எடுக்கப்பட்டது.

இதற்கு முன்னர் ஒருவரை நிற்க வைத்தோ உட்கார வைத்தோ அல்லது ஏதாவதொரு பொருளை வைத்தோ தான் 'புகைப்படம்' எடுக்கப்பட்டது.

இயற்கைக் காட்சிகளைச் சிறந்த முறையில் புகைப்படம் எடுப்பதில் திறமை வாய்ந்த இங்கிலாந்தைச் சேர்ந்த எட்வர்ட் மைபிரிட்ஜ் என்ற புகைப்படப்பிடிப்பாளரை 1879 ஆம் ஆண்டு கலிபோர்னியா மாநிலத்து ஆளுனர் அழைத்து, 'குதிரை தாவி ஓடும்போது காற்றில் மிதப்பது போல் நான்கு கால்களும் தரையில் படாதபடி இருப்பதுண்டா? நான் அப்படி இருக்கும் என்கிறேன். எனினும், என் நண்பர்கள் இருக்காது என்கிறார்கள். நீங்கள்தான் இந்தச் சந்தேகத்தைத் தீர்த்து வைக்கவேண்டும்'' என்றார்.

''சரி முயற்சிப்போம்'' என்று கூறிய மைபிரிட்ஜ், குதிரைப் பந்தய மைதானமொன்றில் இருபத்தி நான்கு கெமராக்களை வைத்து அவற்றின் மூடிகளுடன் கயிறுகளை இணைத்தார். கெமராக்களை வரிசையாகத் தாண்டி குதிரை பாய்ந்து செல்லும் போது ஒவ்வொரு கயிறாக அறுந்து கொண்டு செல்லும். அந்தக் கயிறு அறுபட்டதும் குறித்த கெமராவின் மூடி திறந்து, பாயும் குதிரையின் படம் எடுக் கப்பட்டுவிடும். இவ்வாறு 400 படங்கள் அளவில் எடுக்கப்பட்டன.

இதற்காக ஆளுனரும் ஏராளமாகச் செலவு செய்தார். எனினும், அவரது செலவு வீண்போகவில்லை. மாறாக, குதிரை பாயும்போது அதன் நான்கு கால்களுமே அந்தரத்தில்தான் இருக்கின்றன என்பதை எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மூலம் நிரூபிக்கக்கூடியதாக இருந்தன.

உலகில் முதலாவதாக எடுக்கப்பட்ட இந்த சலனப் புகைப்படங்கள்தான் பிற்காலத்தில் சினிமா என்ற அரிய பொழுதுபோக்குச் சாதனத்தைக் கண்டு பிடிக்கத் தூண்டுகோலாக அமைந்தன.

மைபிரிட்ஜ் தன்னால் எடுக்கப்பட்ட அனைத்து புகைப்படங்களையும் தொகுத்து அதனை 'ஓடும் குதிரை' என்ற பெயரில் ஒரு புத்தகமாக வெளியிட்டார். இதேவேளை நடப்பது, ஓடுவது போன்ற செயற்பாடுகளையும் படம் பிடிப்பது தொடர்பாக ஆராய்ச்சிகளைச் செய்து கொண்டிருந்த இ.ஜே.ஹெல் (பிரான்ஸ்), ஹென்றி ஹெல்வின்சன் (அமெரிக்கா) போன்ற விஞ்ஞானிகள் இந்தப் புத்தகத்தைப் பார்த்து மைபிரிட்ஜ்ஜின் முறையைப் பின்பற்றி மேலும் பல பரிசோதனைகளைச் செய்து சலனப் புகைப்படங்களை (Motion Photographs) எடுப்பதற்கான கெமராக்களைக் கண்டுபிடித்தனர்.

எம்.றிழ்வான் ஜெக்ஹிம்.

FUNDAY TIMES | விஜய் | PEOPLE'S BANK THE PULSE OF THE PEOPLE | විජය

# அகில இலங்கை கட்டுரைப் போட்டி

**அனுசரணை:- மக்கள் வங்கி**

People's Bank Sisu Udana An outstanding future generation

மக்கள் வங்கியின் அனுசரணையுடன் நடத்தப்படும் 'விஜய்' அகில இலங்கை கட்டுரைப்போட்டியில் பங்குகொள்ள வருமாறு உங்களை வரவேற்கிறோம். இந்தப் போட்டியில் நாடெங்குமுள்ள நான்கு பிரிவு மாணவர்களும் பங்குபற்றலாம். கட்டுரைகள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் எந்த மொழியிலும் எழுதப்படலாம்.

**கட்டுரைக்கான தலைப்புக்கள் வருமாறு:**

தரம் 2-3: 'எனது பாடசாலை' எனும் தலைப்பில் 10 வசனங்கள் (சுமார் 100 சொற்கள்)

தரம் 4-5: எனது நாடு (150 சொற்கள்)

தரம் 6-7: நமது சூழலை பாதுகாத்தல் (200 சொற்கள்)

தரம் 8-9: ஒற்றுமையே பலம்

**கட்டுரைகள் அனுப்புவதற்கான முடிவுத் திகதி 18 மே 2008**

கிடைக்கப்படும் கட்டுரைகளில் தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழி மூலம் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒவ்வொரு மாவட்டங்களிலிருந்தும்10 இறுதிப்போட்டியாளர்கள் தெரிவு செய்யப்படுவர். இறுதிக்கட்டப்போட்டி ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்று வீதம் 25 நிலையங்களில் நடத்தப்படும்.

தெரிவு செய்யப்பட்ட இறுதிப்போட்டியாளர்கள் குறிப்பிட்ட திகதியன்று அருகிலுள்ள நிலையத்துக்கு வருமாறு கேட்கப்படுவார்கள். அன்றைய தினம் மாவட்ட நிலையங்களில் நடத்தப்படும் போட்டியின் போது கொடுக்கப்படும் புதிய தலைப்பில் குறிப்பிட்ட நேரத்துக்குள் கட்டுரைகள் எழுதி முடிக்கப்படவேண்டும்.

மத்தியஸ்தர் குழுவொன்று அகில இலங்கை ரீதியிலான வெற்றியாளர்களை தெரிவு செய்யும். அவர்களின் முடிவே இறுதியானதாகும்.

**பரிசுகள்**

பரிசுகள்: ஒவ்வொரு பிரிவிலும் ஒவ்வொரு மொழியிலும் ஐந்து பரிசுகள் வெற்றியாளர்களுக்கு வழங்கப்படும்.

முதலாவது இடம்: ரூபா 10,000 பணப்பரிசும், சிசு உதான கணக்குக்கு 5,000 ரூபாவும்.

2 ஆம் இடம்: ரூபா 7,000 பணப் பரிசும், சிசு உதான கணக்குக்கு 3,500 ரூபாவும்.

3 ஆம் இடம்: ரூபா 5,000 பணப் பரிசும் சிசு உதான கணக்குக்கு 2,500 ரூபாவும்.

4 ஆம் இடம்: ரூபா 3,000 பணப் பரிசும் சிசு உதான கணக்குக்கு 1500 ரூபாவும்.

5 ஆம் இடம்: ரூபா 2,000 பணப் பரிசும் சிசு உதான கணக்குக்கு 1,000 ரூபாவும்.

**மாவட்ட பரிசுகள்**

மாவட்ட ரீதியில் ஒவ்வொரு வயதுப் பிரிவிலிருந்தும் ஒவ்வொரு மொழியிலிருந்தும் சிறந்த வெற்றியாளருக்கு ரூபா 1000 பரிசு.

ஒவ்வொரு பிரிவிலிருந்தும் முதல் மூன்று அகில இலங்கை ரீதியிலான வெற்றியாளர்களுக்கு வெற்றிச் சின்னங்கள் வழங்கப்படும்.

**நற்சான்றிதழ்கள்**

அகில இலங்கை மற்றும் மாவட்ட ரீதியிலான வெற்றியாளர்களுக்கு நற்சான்றிதழ்கள் வழங்கப்படும்.

கூப்பனில் எல்லா முக்கிய விபரங்களையும் நிரப்பி கட்டுரையுடன் இணைத்து எமக்கு அனுப்பி வைக்கவும். மேற்படி, கட்டுரைகள் உங்களின் சுயமுயற்சியால் எழுதப்பட்டது என்பது பெற்றோரால் அல்லது ஆசிரியரால் உறுதிப் படுத்தப்படவேண்டும்.

**நிலையங்கள்**

மாவட்ட நிலையங்கள் பற்றிய விபரம் காலக் கிரமத்தில் வெளியிடப் படும்.

FUNDAY TIMES அகில-இலங்கை கட்டுரைப் போட்டி விஜய் විජය

| | |
|---|---|
| பெயர் | : ........................ |
| பிறந்த திகதி | : ........................ |
| முகவரி | : ........................ |
| | ........................ |
| தொலைபேசி | : ........................ |
| பாடசாலை | : ........................ |
| மாவட்டம் | : ........................ |

PEOPLE'S BANK THE PULSE OF THE PEOPLE | People's Bank Sisu Udana

விஜய், கட்டுரைப் போட்டி
த.பெ.இல 2037,
கொழும்பு.

அல்லது

விஜய், கட்டுரைப் போட்டி
8, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு-02.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரும்

**இரும்பை உருவாக்குவதில் முக்கியமாகப் பயன்படுத்தப்படும் மூலப்பொருளாக இரும்புத் தாது காணப்படுகின்றது. இதைத் தவிர சுண்ணக்கல், நிலக்கரி என்பனவும் பயன்படுத்தப்படுகின்றன. இரும்புத் துருவில் உள்ள கழிவுப் பொருட்களை அகற்றுவதை நோக்காகக் கொண்டே இவை பயன்படுத்தப்படுகின்றன**

*'இரும்பு' எனும் சொல்லைக் கேட்டவுடன் கெட்டியானதும் வன்மையானதுமான ஒரு பொருள்தான் உங்கள் மனதில் தோன்றும். உண்மையிலேயே இரும்பு என்பது வன்மையான ஓர் உலோகமாகும். கடின இரும்பு உருவாக்கத்திற்கு புவி மேற்பரப்பிலிருந்து கிடைக்கும் நுண்ணிய மண் வகைகளே உதவுகின்றன என்றால் உங் களுக்கு சற்று ஆச்சரியமாக இருக்குமல்லவா? 'இரும்புத் தாது' என அழைக்கப்படும் இந்த மண் வகைகள் சுண்ணக் கல், நிலக்கரி என்பனவற்றுடன் கலக்கப்பட்டு சூளையில் வைத்து இரும்பு உற்பத்தி செய் யப்படுகின்றது.*

*எமது நாட்டில் பிரதானமாக மேற்கொள்ளப்பட்டு வரும் தொழில்களை அலசிப் பார்த் தால் புராதன காலத்தில் இருந்து இன்று வரை மிகவும் பிரசித்தி பெற்ற தொழிலாக இரும்புக் கைத்தொழில் விளங்குவதை அவதானிக்கலாம். கைத்தொ ழில்மயமான உலகில் இரும் பும் தகரமும் மிக அவசியமான உலோகப் பொருளாக விளங்குகின்றமை இதற் குக் காரணமாகும்.*

*அத்துடன் வாகனங்கள், பாரிய கட்டிடங்கள், பாலம் மற்றும் பல்வேறு உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படும் இயந்திரங் கள் என்பனவற்றை உற்பத்தி செய்வதற்கும் இன்னோரன்ன தேவைகளுக்கும் இரும்பும் உருக்கும் பயன்படுத்தப்படு கின்றன.*

## மூலப்பொருள்


இரும்பை உற்பத்தி செய்யும் பொருட்டு பயன்படுத்தப்படும் பிர தான மூலப்பொருள் 'இரும்புத் தாது' ஆகும். இது தவிர சுண்ணக்கல், நிலக் கரி என்பனவும் பயன்படுத்தப்படுகி றன. இரும்புத் துருவில் உள்ள கழி வுப் பெருட்களை அகற்றுவதற்கே இவை பயன்படுத்தப்படுகின்றன.


## உருக்கு உலை (Blast Furnace)

உருக்கு உலை (தீச்சூளை) மூலமே இரும்பு உற்பத்தி செய்யப்படுகின் றது. 60 மீற்றர் (200 அடி) உயரமான உருக்கு உலை ஒன்றின் மூலம் நாளொன்றுக்கு 10,000 தொன் இரும்பை உற்பத்தி செய்யமுடியும்.

வெப்பக்காற்று உள்ள பிரதே சத்திற்கு இரசாயனப் பொருட்கள் உட்பிரவேசிக்கும் பொழுதே இரசாயனத் தாக்கம் ஆரம்பமாகின் றது. ஆக, நிலக்கரியை எரிப்பதன் மூலம் தேவையான அளவு வெப் பம் கிடைக்கின்றது. ஒக்சிஜ னுடன் தாக்கமடைவதன் காரணமாக காபன்டை யொக்சைட்டும் காபன் மொனொக்சைட்டும் உருவாகின்றன. காபன் மொனொக்சைட் மூலம் ஒக்சிஜன் அணுவைப் பெற்று அயன்ஒக்சைட் உருவாகின்றது. அதன்பின் அவை திரும்பவும் தாக்கமுற்று காபன்டை யொக்சைட்டும் இரும்பும் உருவா கின்றன. உருக்கு உலையின் புறவெப் பமானது சுமார் 1900C° (3500F°) ஆக இருக்கும். இங்கு உற்பத்தியா கும் இரும்பு, திரவ நிலையில் உலை யின் அடியில் தேங்கியிருக்கும்.







## சுத்திகரிக்கப்படாத உலோகம்

இரும்பு உற்பத்தியின் பொழுது பயன்படுத்தப்படும் சுண்ணக்கல்லில் அடங்கியுள்ள மணல், களி, கற்கள் என்பன இந்தக் கலவையுடன் சேர்ந்து கலந்திருக்கும். அதனையே சுத்திகரிக்கப்படாத உலோகம் என்போம். இவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ரும்பு உருவாக்கம்




இரத்தீச் ஜெயகர்

கழிவுப்பொருளாக இருப்பதோடு உலோகக் கலவையின் மேற்பரப்பில் மிதந்தபடி காணப்படும். உயர் வெப்பநிலையில் காபன் பொஸ்பரஸ் போன்ற மூலப்பொருள் இரும்புடன் கலக்க வாய்ப்புண்டு. இங்கு $Fe_3C$, $Fe_3Si$, $Fe_3P$ ஆகியவை உருவாக வாய்ப்புண்டு. சுத்திகரிக்கப்படாத இந்த இரும்பானது இரும்புப் பாளங்கள் (Pig-iron) என அழைக்கப்படுகின்றது.

## உருக்கு -(Steel)

இரும்புத் துரு உருக்கு உலையினுள் தாக்கத்திற்கு உட்படுவதன் மூலம் உருக்கு உற்பத்தியாகின்றது. இதற்காக ஒக்சிஜன் உலை பயன்படுத்தப்படுகின்றது.

## ஒக்சிஜன் உலை

இரும்பானது ஒக்சிஜன் உலையினுள் நடைபெறும் செயற்பாட்டின் மூலம் உருக்காக மாற்றமடைகின்றது. இதன்போது இரும்பினுள் இருக்கும் காபன் வெளியேற்றப்படும். உலையினுள் இரும்பு சேமிக்கப்படுவதோடு அது ஒக்சியேற்றப்படுகின்றது. இதன்போது காபன் உடன் கலந்து காபன் மொனொக்சைட்டை உருவாக்குகின்றது. இந்த உலையின் மூலம் 40 நிமிடங்களில் 350 தொன் உருக்கு உற்பத்தியாக்கப்படுகின்றது.

## துருப்பிடிக்காத உருக்கு (Stainless Steel)

உலோகத்துடன் க்ரோமியம் மற்றும் நிக்கல் கலப்பதன் மூலம் துருப்பிடிக்காத உருக்கு உற்பத்தியாகின்றது. இவை கடினத் தன்மையற்றவை. நாம் பயன்படுத்தும் கரண்டி மற்றும் கத்தி என்பனவற்றை உற்பத்தி செய்ய இந்த வகை உலோகமே பயன்படுத்தப்படுகின்றது.

## உருக்கின் பயன்பாடு

பல்வேறு வகையில் எமக்குப் பயன் தரும் உலோகமாக உருக்கினைக் குறிப்பிடலாம். உருக்கில் இருக்கும் காபனின் விகிதாசாரத்திற்கேற்ப அதனை வகைப்படுத்தலாம். காரின் வெளிப்பாகத்தை மூடி மெழுகுவதற்கு தரம் குறைந்த காபன் பயன்படுத்தப்படுகின்றது. கப்பலை நிர்மாணிக்க நடுத்தரமுடைய காபன் விகிதாசாரத்தைக் கொண்ட உருக்கு பயன்படுத்தப்படுகின்றது. அதிகளவான விகிதாசாரத்திலான காபனைக் கொண்டிருப்பின் அந்த உலோகமானது கனமானதாக இருக்கும். ஜெட் இயந்திரத்தை உற்பத்தி செய்ய 'தன்ஸ்டன்' எனும் உலோகம் பயன்படுத்தப்படுகின்றது.

## ஹென்ரி பெஸமர் (Henry Bessemer)

உலையினுள் ஒக்சிஜனை உட்செலுத்தி உருக்கு உற்பத்தி செய்யும் முறையை பிரித்தானியரான ஹென்றி பெஸமர் என்பவரே முதன் முதலில் அறிமுகம் செய்தார். அது 1856 ஆம் ஆண்டிலாகும்.

## உருக்கு உலையினுள் நிகழும் இரசாயன செயற்பாடுகள்

| | | |
|---|---|---|
| $Fe_2O_3+3CO$ | → | $2FeO+3CO_2$ |
| ஃபெரஸ் + காபன் ஒக்சைட் மொனொக்சைட் | → | ஃபெரஸ் + காபன் ஒக்சைட் டயொக்சைட் |
| $C+O_2$ | → | $CO_2$ |
| காபன்+ஒக்சிஜன் | → | காபன் டயொக்சைட் |
| $CO_2+C$ | → | $2CO$ |
| காபன் டயொக்சைட்+காபன் | → | காபன் மொனொக்சைட் |
| $CaCo_3$ | → | $CaO+CO_2$ |
| கல்சியம் காபனேட் | → | கல்சியம் + காபன் ஒக்சைட் டயொக்சைட் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பீர்பாலின் சாமர்த்தியம்

தர்மபுரி நாட்டின் அரச சபையில் நல்ல திறமையானவர்கள் பலர் நிறைந்து இருந்தனர். இவர்களில் மிகத் திறமையானவராகவும் சாமர்த்தியமானவராகவும் பீர்பால் என்பவர் இருந்தார். அரசரும் பீர்பாலும் மாறுவேடத்தில் நாட்டைச் சுற்றிப் பார்ப்பது வழக்கம். அவ்வாறு ஒருநாள், மாறுவேடத்தில் இருவரும் செல்கையில் சந்தையில் வியாபாரிகள் இருவரை சந்தித்தனர். அவர்கள் பேசிய மொழி அரசருக்கும் பீர்பாலுக்கும் விளங்கவில்லை.

அரசர் பீர்பாலிடம் நான் எவ்வாறு இந்நாட்டை ஆழ்வது நம் நாட்டில் பேசப்படும் மொழியைக் கூட என்னால் அறிய முடியவில்லையே என சோகமாகக் கூறினார்.

பீர்பால் "நம் அரச சபையில் பன்மொழிப் புலவர் ஒருவரை வைத்துக்கொள்வோம்" எனக் கூறினார். அரசரும் அதற்கு இணங்கினார். மறுநாள் பத்து மொழிகளை நன்றாகப் பேசும் ஒருவர் அழைத்து வரப்பட்டார்.






அவர் பத்து மொழிகளையும் சிறப்பாகப் பேசினார். அரசர் வியந்து, "உமது தாய்மொழி எது?" என வினவினார். அதற்கு அவர் உங்கள் அரச சபையில் நல்ல திறமையானவர்கள் இருக்கிறார்கள்.. அல்லவா... அவர்களை கண்டுபிடிக்கச் சொல்லுங்கள்" எனப் பதில் கூறினார். புலவர்கள் அவரிடம் பத்து மொழிகளிலும் வினவினார்கள். ஆனாலும், ஒருவராலும் அவரின் தாய்மொழியை அறியமுடியவில்லை.

அரசர் பீர்பாலிடம் "உங்களாலும் கண்டுபிடிக்க முடியவில்லையா?" என வினவினார். பீர்பால் அரசரிடம் ஒருநாள் அவகாசம் வேண்டும்" எனக் கூறினார். அன்று இரவு பன்மொழிப் புலவர் தமது வீட்டில் நன்றாக உறங்கிக் கொண்டிருக்கையில் பீர்பால் அங்கு போய் சத்தம் போட்டார். கோபம் அடைந்த பன்மொழிப் புலவர் தனது தாய்மொழியான ஹிந்தியில் ஏசினார்.

மறுநாள் அரச சபையில் பீர்பால் அவரின் தாய்மொழிஹிந்தி தான் என்று கூறினார்.

அரசர், "எவ்வாறு இதனைக் கண்டுபிடித்தீர்?" என வினவினார். நடந்ததைக் கூறிய பீர்பால் "எவராக இருந்தாலும், எத்தனை மொழி தெரிந்தவராக இருந்தாலும் தூக்கக்கலக்கத்திலும், கோபத்திலும் தமது தாய்மொழியிலேயே பேசுவார்கள்" என்று கூறினார்.

ஆர்.விக்னேஸ்வர[illegible]
ரொசல்ல.

## விஞ்ஞான விளக்கங்கள்



1. மீன்கள் வளர்க்கப்படும் தொட்டியில் சிறிய நீர்த் தாவரங்களை வளர்த்தல் மீன்கள் அவற்றை உட்கொள்ளாத போதிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

✱ மீன்கள் நீரில் கரைந்து இருக்கும் ஒட்சிசனை சுவாசிப்பதற்கு நீர்த்தாவரங்கள் அவசியமாகும். தாவரங்கள் பகல் வேளைகளில் (ஒளித்தொகுப்பின்போது) ஒட்சிசனை வெளியேற்றும். இவ்வாறு தாவரங்களினால் வெளியேற்றப்படும் ஒட்சிசன் நீரில் கரைவதனால் அது மீன்களின் சுவாசத்திற்குப் பயன்படும்.



2. பலா, ஈரப்பலா, பாகல் போன்ற காய்கறிகளை மெல்லியதாக வெட்டி நன்றாக உலர்த்தி நெடுங்காலத்திற்குப் பழுதுபடாமல் வைக்க முடியும்.

✱ மெல்லியதாக வெட்டும் போது அதிலுள்ள நீர் விரைவாக ஆவியாகும். நீர் இல்லாமையால் நுண்ணங்கிகளின் வளர்ச்சி தடைப்படும். இவ்வாறு உலர்த்தப்படும் உணவு வகைகள் நீண்ட காலம் பாதுகாக்கப்படும்.



3. கடும் வெப்பம் உள்ள நாட்களில் பகலில் சடுதியாக மழை பெய்யும்போது தார் வீதிகளிலிருந்து புகை வெளி வருவதைக் காணலாம்.

கடும் சூரிய வெப்பத்தினால் தார்ப் பாதைகள் நன்கு வெப்பமடைகின்றன. வெப்பமான தார்ப் பாதைகளின் மீது மழை பெய்யும் போது நீர் விரைவில் நீராவியாகின்றது. இதனால், ஆவியாகும் நீராவி புகை போன்று தோற்றமளிக்கிறது.


இன்ஷிரா இப்ஹாம், அடுலுகம.

## ஒலிம்பிக் போட்டிகளில் புதிதாக சேர்க்கப்பட்ட விளையாட்டுக்கள்

| ஆண்டு | நடைபெற்ற இடம் | சேர்த்துக்கொள்ளப்பட்ட விளையாட்டு |
|---|---|---|
| 1928 | லண்டன் | ஹொக்கி |
| 1936 | பேர்லின் | கூடைப்பந்து |
| 1996 | அட்லாண்டா | பெண்கள் கால்பந்து |
| 1912 | ஸ்டொக்ஹோம் | பெண்களுக்கான நீச்சல் போட்டி |
| 1972 | மியுசிச் | கறுப்பு செப்தம்பா என்னும் பயங்கரமான இஸ்ரேல் விளையாட்டு |

தொகுப்பு: எம்.எப்.சப்றான்,
தரம் - 9^, தி/அல்-ஸம்றா ம.வித்., தோப்பூர்.

## மனித நேயம்



மனிதா நீ உன்
மனிதாபிமானத்தை
எங்கே தொலைத்தாய்?

மனித நேயத்தை
மறந்து விட்டு
மிருகத்தனமான
செயல்களில் ஈடுபடும்
உன் மனித நேயம்
எங்கே போயிற்று?

உன் தாய் நாட்டுக்கு
நல்லன செய்யும்
நற்பிரஜையாய்
வாழ வேண்டிய நீ
இழிவைத் தேடித் தரும்
ஈனச் செயல்கள் செய்வது
முறைதானா?

வேண்டாம் மனிதா!
விட்டு விடு
இந்த மனிதநேயம்
அற்ற செயல்களை!

நாட்டிற்கும் வீட்டிற்கும்
நல்லவை செய்யும்
மனிதாபிமானமுள்ள
மனிதனாய் இன்றே!
மாறி விடு!

நிஸ்னா அபூபக்கர், பண்டாரகம.



படத்தை
இங்கே
ஒட்டவும்

விஜய்
மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:......................................
முகவரி:......................................
......................................
பாடசாலை:......................................
வகுப்பு:......................................

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிண்ணியா, 05 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நஜீ முத்தீன் தம்பதியரின் புதல்வரான அஸ்லாம், தனது பத்தாவது பிறந்தநாளை 11.04.2008 இல் தனது இல்லத்தில் வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரை உம்மா, வாப்பா, சகோதரர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் வாழ்த்துகின்றனர்.

**(தகவல்: நா.மு.றுஸ்மில், கிண்ணியா)**

## கைவண்ணங்கள்

கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



ஜோ.பிரபாகர் ரொபர்ட், தரம் - $10^{A}$, புனித அந்தோனியார் கல்., ஊர்காவற்றுறை.



பி.வரப்பிரகாஸ், தரம் - 1, மா/கணேஸ்வரா வித்., மாத்தளை.



எம்.கே.எம்.ரஸாத், நொக்ஸ் வீதி, மூதூர்-05.



எம்.பி.எம்.சாஜித், தரம் - 5, ஹிஜ்ராபுர மு.வித்., ஹிஜ்ராபுர.



கே.மோகனபாபு, தரம் - 9, ப/நிவ்பார்க் த.ம.வித்., எல்ல.



எஸ்.மன்ஸயன், தரம் - 1, கிங்ஸ்டன் சர்வதேச பாட., கொழும்பு.



எம்.ஆர்.சல்மா, தரம் - $3^{B}$, அக்ல் சர்வதேச பெ.பா., அக்குறனை.



இல்மா ஷரீஃப், தரம் - 7, பாபுஸலாம் ம.வித்., நாம்புளுவ.

## விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு



அண்மையில் கல்முனை, வெஸ்லி உயர்தரப் பாடசாலையில் நடைபெற்ற ஜெயந்தி விழாவில் மாணவர்கள் பாடலிசைத்து நடனமாடுவதைப் படத்தில் காணலாம்.

(தகவல்: நிப்றாஸ் மன்சூர்-'விஜய்' இளம் செய்தியாளர்)

## விஜய் மாணவர் கூடம்



அங்.இல : 1911

ஜெ.ஷ.துர்சியன், தரம் - $3^{M}$, கார்மேல் பாத்திமா தே.பாட., கல்முனை.



அங்.இல : 1912

எம்.எச்.எம்.யமீன், தரம் - $9^{A}$, க/அல்-பதுரியா ம.வித்., கஹட்டோவிட்ட.



அங்.இல : 1913

பா.வினோசிகா, தரம் - $8^{B}$, மு/ஒட்டுசுட்டான் ம.வித்., ஒட்டுசுட்டான்.



அங்.இல : 1914

மு.மு.மபாஸ், தரம் - $11^{A}$, மட்/அல்-ஹிறா வித்., காத்தான்குடி-03.



அங்.இல : 1915

ரி.துவாரகன், தரம் - $10^{D}$, யா/புனித ஜோன்ஸ் கல்., அச்சுவேலி.



அங்.இல : 1916

ஜெ.எம்.றினோஸ், தரம் - 11, சிறாஜிய்யா அறபுக் கல்., வாழைச்சேனை-05.



அங்.இல : 1917

சு.விஜயசாந்தி, தரம் - $6^{B}$, வ/செட்டிக்குளம் ம.வித்., வவுனியா.



அங்.இல : 1918

எம்.ஏ.எம்.யாசிர், தரம் - $10^{B}$, கு/மதீனா தே.பா., சியம்பலாகஸ்கொடுவ.



அங்.இல : 1919

இ.மயூரதன், தரம் - $7^{A}$, யா/மகாஜனக் கல்., தெல்லிப்பழை.



அங்.இல : 1920

பீ.வஸிம் அக்ரம், தரம் - 12 (வணிகம்), சாஹிரா தே.பா., புத்தளம்.



அங்.இல : 1921

ரா.சந்ரா, தரம் - 11, மா/தமிழ் ம.வித்., மாத்தளை.



அங்.இல : 1922

எம்.எச்.எம்.ரிஸ்வான், தரம் - 12, அல்-புர்கான் மு.ந.பா., கலேவெல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் மரக்கறி விற்பனை நிலையத்தில் மரக்கறி வியாபாரிக்கும் ஆனந்தனுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைத் தருகின்றோம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

වෙළෙන්දා: එන්න මහත්තයා එන්න.
வியாபாரி: என்ன மஹத்தயா என்ன.
வியாபாரி: வாங்க ஐயா வாங்க.
හොඳ එළවළු තියෙනවා, මොනව ද ඕනේ ?
ஹொந்த எளவளு தியெனவா, மொனவத ஓனே?
நல்ல மரக்கறி இருக்கு, என்ன வேண்டும்?

ආනන්දන්: වම්බටු කීය ද ?
ஆனந்தன்: வம்படு கீயத?
ஆனந்தன்: கத்தரிக்காய் எவ்வளவு?



වෙළෙන්දා: කිලෝ එකක් රුපියල් හැටයි.
வியாபாரி: கிலோ எகக் ருபியல் ஹெடய்.
வியாபாரி: கிலோ அறுபது ரூபாய்.

ආනන්දන්: මිල වැඩියි.
ஆனந்தன்: மில வெடிய்.
ஆனந்தன்: விலை அதிகம்.

වෙළෙන්දා: නැහැ මහත්තයා, මේ හොඳ වම්බටු. ගමේ වම්බටු.
வியாபாரி: நெஹெ மஹத்தயா, மே ஹொந்த வம்படு. கமே வம்படு.
வியாபாரி: இல்லை ஐயா, இது நல்ல கத்தரிக்காய். நாட்டுக் கத்தரிக்காய்.

ආනන්දන්: වම්බටු කිලෝ එකක් දෙන්න.
ஆனந்தன்: வம்படு கிலோ எகக் தென்ன.
ஆனந்தன்: கத்தரிக்காய் ஒரு கிலோ தாருங்கள்.
මුරුංගා කිලෝ එකකුත් දෙන්න.
முருங்கா கிலோ எககுத் தென்ன.
முருங்கக்காய் ஒரு கிலோவும் தாருங்கள்.



වෙළෙන්දා: වෙන මොනව ද ඕනේ ?
வியாபாரி: வென மொனவத ஓனே?
வியாபாரி: வேறு என்ன வேண்டும்?

ආනන්දන්: තක්කාලි ග්‍රෑම් දෙසිය පනහක් දෙන්න.
ஆனந்தன்: தக்காளி கிராம் தெசிய பனஹக் தென்ன.
ஆனந்தன்: தக்காளி இருநூற்றி ஐம்பது கிராம் தாருங்கள்.
කරවිල පන්සියක් දෙන්න.
கறவில பன்சீயக் தென்ன.
பாகற்காய் ஐந்நூறு கிராம் தாருங்கள்.

වෙළෙන්දා: පුහුල් දෙන්න ද මහත්තයා ?
வியாபாரி: புஹுல் தென்னத மஹத்தயா?
வியாபாரி: பூசணிக்காய் தரவா ஐயா?

ආනන්දන්: පුහුල් එපා. ඇති, ගාන කීය ද ?
ஆனந்தன்: புஹுல் எபா. எதி, காண கீயத?
ஆனந்தன்: பூசணிக்காய் வேண்டாம். போதும், கணக்கு எவ்வளவு?



වෙළෙන්දා: රුපියල් එකසිය පනහයි.
வியாபாரி: ருபியல் எகசிய பணஹய்.
வியாபாரி: நூற்றி ஐம்பது ரூபாய்.

ආනන්දන්: මෙන්න මුදල්.
ஆனந்தன்: மென்ன முதல்.
ஆனந்தன்: இந்தாருங்கள் காசு.

වෙළෙන්දා: මෙන්න මහත්තයා ඉතුරු මුදල්.
வியாபாரி: மென்ன மஹத்தயா இதுறு முதல்.
வியாபாரி: இந்தாருங்கள் ஐயா மிகுதிப் பணம்.

### අභ්‍යාසය பயிற்சி

வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழி பெயர்க்க.

உதா: கத்தரிக்காய் என்ன விலை?
වම්බටු කීය ද ?

i. இது நல்ல கத்தரிக்காய்.
ii. ஒரு கிலோ அறுபது ரூபாய்.
iii. வேறு என்ன வேண்டும?




## Future Simple Tense - எதிர்கால தனி வாக்கியம்

மேற்படி எதிர்கால தனி வாக்கியங்களில் வகையில் காணப்படுகின்ற 'வினா' வாக்கியம், 'உடன்பாடு' வாக்கியம், 'எதிர்மறை' வாக்கியம் ஆகிய மூன்றையும் ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) Will you drink? - நீ குடிப்பாயா? (வினா)
(ஆ) Yes, I will drink - ஆம், நான் குடிப்பேன். (உடன்பாடு)
(இ) No, I won't drink - இல்லை, நான் குடிக்கமாட்டேன். (எதிர்மறை)

(அ) Will they drink? - அவர்கள் குடிப்பார்களா? (வினா)
(ஆ) Yes, they will drink - ஆம், அவர்கள் குடிப்பார்கள். (உடன்பாடு)
(இ) No, they won't drink - இல்லை, அவர்கள் குடிக்கமாட்டார்கள். (எதிர்மறை)

(அ) Will these girls drink?
இந்தப் பெண்பிள்ளைகள் குடிப்பார்களா? (வினா)
(ஆ) Yes, these girls will drink.
ஆம், இந்தப் பெண்பிள்ளைகள் குடிப்பார்கள். (உடன்பாடு)
(இ) No, these girls won't drink.
இல்லை, இந்தப் பெண்பிள்ளைகள் குடிக்கமாட்டார்கள். (எதிர்மறை)

* மேற்படி வாக்கியங்களில் செயற்படுபொருள் (Object) சேர்க்கப்படுகின்ற போது, அவை பின்வருமாறு அமைகின்றன.

(அ) Will you drink coffee?
நீ கோப்பி குடிப்பாயா? (வினா வாக்கியம்)
(ஆ) Yes, I will drink coffee.
ஆம், நான் கோப்பி குடிப்பேன். (உடன்பாடு)
(இ) No, I won't drink coffee.
இல்லை, நான் கோப்பி குடிக்கமாட்டேன். (எதிர்மறை)

(அ) Will they drink milk?
அவர்கள் பால் குடிப்பார்களா? (வினா வாக்கியம்)
(ஆ) Yes, they will drink milk.
ஆம், அவர்கள் பால் குடிப்பார்கள். (உடன்பாடு)
(இ) No, they won't drink milk.
இல்லை, அவர்கள் பால் குடிக்கமாட்டார்கள். (எதிர்மறை)

(அ) Will these girls drink tea?
இந்தப் பெண்பிள்ளைகள் தேநீர் குடிப்பார்களா? (வினா)
(ஆ) Yes, these girls will drink tea.
ஆம், இந்தப் பெண்பிள்ளைகள் தேநீர் குடிப்பார்கள். (உடன்பாடு)
(இ) No, these girls won't drink tea.
இல்லை, இந்தப் பெண்பிள்ளைகள் தேநீர் குடிக்கமாட்டார்கள். (எதிர்மறை)

He, She, It முதலான பிரதிப் பெயர்ச்சொற்களை (Pronouns) எழுவாய் பகுதியில் கையாண்டு அமைக்கப்பட்ட வாக்கியங்களை இங்கே பார்ப்போம்.

(அ) Will he drink? - அவன் குடிப்பானா? (வினா) ஆண்பால்.
(ஆ) Yes, he will drink - ஆம், அவன் குடிப்பான். (உடன்பாடு)
(இ) No, he won't drink - இல்லை, அவன் குடிக்கமாட்டான். (எதிர்மறை)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இங்கு வழங்கப்பட்டுள்ள உலக நடப்புக்கள் தொடர்பான தகவல்களிலிருந்து கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடை அளிப்போரில் மூவருக்குத் தலா ரூ.150/= பெறுமதியான 'அற்லஸ்' பாடசாலை உபகரணங்களை வாங்கக் கூடிய பண வவுச்சர்களைப் பரிசாக சிலோன் பென்சில் நிறுவனம் (அற்லஸ்) வழங்கும்.

## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# பிரிட்டன் பிரதமரின் கட்சிக்கு தோல்வி

இங்கிலாந்தின் வேல்ஸ் மற்றும் லண்டன் பிரதேசங்களில் நடைபெற்ற பிரதேச சபை தேர்தல்களில் ஆளும் தொழிற்கட்சி அடைந்த தோல்வியினால் நகரமுதல்வர் பதவியை அக்கட்சி இழந்துள்ளது. இதனால், பிரதமர் கோல்டன் பிரவுனுக்கு இது பாரிய பின்னடைவு என்று கருதப்படுகின்றது. கொன்சர்வேட்டிவ் கட்சியின் பொரிஸ் ஜோன்ஸன் என்பவரிடமே, பிரதமர் பிரவுனின் கட்சியைச் சேர்ந்த கென்லிவிங்ஸ்டன் என்பவர் தோல்வியுற்றுள்ளார். இதுவரை காலமும் இவர்தான் நகர முதல்வராக இருந்தவராவார். தற்போது அப்பதவியை அவர் பறிகொடுத்துள்ளார்.

மேற்படி தேர்தலில் வெற்றி பெற்றுள்ள ஜோன்ஸ்டன் எதிர்நோக்கியுள்ள முக்கிய பொறுப்பு, 2012 ஆம் ஆண்டில் பிரிட்டனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளுக்கான ஏற்பாடுகளை செய்வதாகும்.

குறித்த தேர்தலானது பிரதமர் பிரவுனின் ஒரு வருட ஆட்சிக்காலம் குறித்தான மக்களின் அபிப்பிராய வாக்கெடுப்பாகவே கருதப்படுகின்றது.




கடந்த வருடம் ஜூன் மாதம் டொனி பிளேயரிடமிருந்து ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிரவுனின் கட்சி அதன் பின்னர் சந்தித்த முதலாவது தேர்தல் இது என்றும் குறிப்பிடப்படுகின்றது.

பிரிட்டனின் அடுத்த பொதுத் தேர்தல் 2010 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ளமையும் சுட்டிக் காட்டத்தக்கது.

## எரிமலை வெடிப்பு

'சிலி' நாட்டில் 'பெட்டகோனியா' என்ற பிரதேசத்தில் 'டைட்டன்' நகரில் எரிமலை வெடிப்பின் காரணமாக 4,500 ற்கும் மேற்பட்ட மக்கள் அங்கிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இரண்டாயிரம் ஆண்டுகளின் பின்னரே இந்த எரிமலை வெடித்துள்ளதாகவும் கருதப்படுகின்றது.


எரிமலை வெடிப்பினையடுத்து விரைந்து செயற்பட்ட அதிகாரிகள்



வடக்கிலுள்ள சிலோ தீவுகளுக்கு மத்திய பகுதியிலுள்ள பூட்ரோ என்ற பகுதிக்கு மக்களைப் பத்திரமாக அனுப்பி வைத்துள்ளனர்.

எரிமலை வெடிப்பு ஆபத்து நீங்கியதன் பின்னர் பழையபடி தத்தமது குடியிருப்புகளுக்கு மக்கள் திரும்ப முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி புஷ்ஷின் ஆர்வம்



அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் உணவுப் பொருட்களின் விலைவாசி அதிகரித்திருப்பதனால் அந்நாடுகளில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை சமாளிப்பதற்காக 70 கோடி டொலர் நிதியை ஒதுக்குமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் அந்நாட்டின் நாடாளுமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஏராளமான நாடுகள் மேற்படி உணவுப் பஞ்சத்தினால் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குவதையிட்டு தான் பெரிதும் கவலையடைந்திருப்பதாகவும் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் நிலவும் உணவுப் பஞ்சத்தை போக்குவதில் அமெரிக்கா முன்னணிப் பாத்திரத்தை வகிக்கும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். நிவாரண நிதியத்திலிருந்தே உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ள குறித்த நாடுகளுக்கு உதவ வேண்டியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அமெரிக்காவில் காட்டுத் தீ

ஐக்கிய அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் ஏற்பட்ட பாரிய காட்டுத் தீயின்



காரணமாக ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தமது இருப்பிடங்களிலிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சுமார் 500 ஏக்கருக்கும் மேற்பட்ட காட்டுப்பகுதிகளில் இவ்வாறு தீ பற்றியுள்ளமையால் தீயணைப்புப் படையினரின் கருத்தின்படி தீயின் பரவலைக் கூடிய வரையில் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்திருப்பதாகவும், அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்ட மக்களை மீள வரவழைப்பதற்கான உடனடி சூழ்நிலை இன்னும் ஏற்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

உலகில் வெப்பநிலை அதிகரித்து வருகின்றமையின் காரணமாகவே உலக நாடுகள் பலவற்றில் இவ்வாறு காட்டுத் தீ பரவுவது பரவலாக நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகின்றது.

## மியன்மாரில் சூறாவளி

மியன்மாரில் வீசிய கடும் சூறாவளியினால் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோர் மரணமடைந்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. மணிக்கு 190 கி.மீற்றர் வேகத்தில் வீசிய இந்த சூறாவளிக்கு 'நர்கீஸ்' என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. மேற்படி சூறாவளியினால் பல வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் மரங்கள் சரிந்து விழுந்ததில் வீதிப் போக்குவரத்தும் தடைப்பட்டது. சில மணிநேரங்களின் பின்னர் சூறாவளியின் தாக்கம் குறைவடைந்தபோதிலும் மின்சார விநியோகம் முழுமையாகத் தடைப்பட்டே இருந்தது.



இதேவேளை, மேற்படி சூறாவளி தாய்லாந்தை நோக்கி நகர்ந்து சென்றதாகவும் அந்நாட்டின் காலநிலை அவதான நிலையம் அறிவித்திருந்தது.

## அற்லஸ் கேள்வி - 151

**கேள்வி:** கலிபோர்னியா மாநிலம் எந்த நாட்டில் உள்ளது?

சரியான விடை.............................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 151,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

### போட்டி இல - 149 இன் சரியான விடை: மொஹமட் அப்பாஸ்

**பரிசு பெறுவோர்**

பாத்திமா நிஹ்லா,
208, தம்பபண்ணி, புத்தளம்.

எஃப்.இல்ஸானா,
75/98 மதுராபுர,தெனிப்பிட்டிய, வெலிகாமம்.

ஃபாத்திமா ஷுக்ரா,
99A.துணுவில்ல வீதி,வரகஸ்ஹின்ன,
அக்குறனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து நதிப்பள்ளத்தாக்கின் புராதன நாகரிகம்

நதிக்கரை நாகரிகங்களில் இந்து நாகரிகம் முக்கியமானதும் தனித்துவம் மிக்கதாகவும் விளங்குகின்றது. இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளை அண்டிய பிரதேசங்களிலேயே இந்நாகரிகம் கட்டி எழுப்பப்பட்டுள்ளது.




சிலைகள்



அச்சு ஒலை

நீண்ட வரலாற்றைக் கொண்ட இந்து நதிப்பள்ளத்தாக்கில் கற்காலம் முதல் மக்கள் வாழ்ந்ததாக நம்பப்படுகின்றது.

கி.மு 2500ஆம் ஆண்டளவில் இந்துப் பள்ளத்தாக்கில் மொஹன்ஜதாரோ-ஹரப்பா நாகரிகங்கள் கட்டி எழுப்பப்பட்டன. அங்கு இந்தியாவுக்கே தனித்துவமான மிக முன்னேற்றகரமான நாகரிகமொன்று உருவாகியிருந்ததாக வரலாற்றாய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.




இந்து நதிப்பள்ளத்தாக்கின் பிரதேசங்கள்

இந்து நதிப்பள்ளத்தாக்கு நாகரிகத்தில் வாழ்ந்த மக்கள் நகரங்களைத் திட்டமிட்டு அமைப்பதில் தமது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளனர். நீர்க்குழாய்கள் மூலம் நீரை விநியோகிக்கும் முறைகளும் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டது. நகரின் சுகாதார கட்டமைப்புகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வந்தன.

கோதுமை, பார்லி போன்ற தானியங்களை இந்துச் சமவெளியில் பயிரிட்டு விவசாயத்தை மையமாக வைத்து நதியை அண்டிய பிரதேசங்களில் வர்த்தக நடவடிக்கைகளை திறம்படச் செய்து வந்தனர்.

பண்டமாற்று வர்த்தகமுறையில் ஈடுபட்டதோடு அதன் வாயிலாக பலுகிஸ்தான், மொசப்பத்தேமியா, மிஸ்ர் பிரதேசவாசிகளுடன் வர்த்தக நடவடிக்கைகளிலும் கொடுக்கல் வாங்கல்களிலும் ஈடுபட்டதாக வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இம்மக்கள் கடல்வழி வர்த்தகத்திலும் ஈடுபட்டுள்ளனர். பட்டு, யானைத்தந்தம், முத்து போன்றவற்றை விற்பனை செய்துள்ளனர். 'உம்மா' பிரதேசத்திலிருந்து கிடைக்கப் பெற்ற பட்டு, இதற்கு சான்று பகர்கின்றது.



இந்து நாகரிகத்திற்குரிய கட்டிடத் தொகுதியை பிரதிபலிக்கும் படம்



மொஹன்ஜதாரோவின் ஆன்மீக மன்னனின் சிலை



சிலைகள்



இந்து நதி நாகரிகத்தின் கட்டடங்கள்

இந்து நதிப்பள்ளத்தாக்கை அண்டிய நாகரிகம் சம்பந்தமான முக்கிய சான்றாக அங்கிருந்து கிடைக்கப் பெற்ற அச்சு ஓலையைக் குறிப்பிடலாம்.

வலது பக்கத்தில் இருந்து இடப் பக்கமாகவும் அதுவே இரண்டாவது வரியில் எழுதும்பொழுது இடமிருந்து வலமாகவும் அவ்ஓலையில் எழுதப்பட்டுள்ளது. இது அக்காலத்தில் ஓலை எழுதும் முறையாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது. முன்னேற்றகரமானதாக திகழ்ந்த இந்து நதிப்பள்ளத்தாக்கு நாகரிகமானது வெளி நெருக்கடிகள் மற்றும் வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை அனர்த்தங்களாலும் அழிவை எதிர்நோக்கியது.

**ஜே.ஏ.விபாகர்**

# விடாமுயற்சி வெற்றியைத் தரும்

**டார்ட்டார்ஸ் இனத்தைச் சேர்ந்த இளவரசர் தைமூர், உலகையே வென்று தன்னை ஒரு மாபெரும் அரசனாக உயர்த்திக்கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டார்.**

**எனினும், ஒரு சண்டையில் தோல்வி கண்ட அவர், தனது நாட்டை விட்டு ஓடி ஒளிந்து ஒரு குகையில் வாழ வேண்டியேற்பட்டது.**

**ஒருநாள் தைமூர் ஒரு எறும்பு தன்னைவிட அதிகமான எடையுள்ள ஓர் உணவுப் பொருளை இழுத்துக் கொண்டு குகையின் பாறையின் மீது ஏறிச் செல்வதைக் கண்டார். அந்தப் பாறையின் ஒரு பகுதியை கடக்கும்போது அந்த எறும்பு கீழே விழுந்துவிட்டது. எனினும், அந்த எறும்போ மீண்டும் எடை மிகுந்த அந்த உணவுப் பொருளை இழுத்துக்கொண்டு தன் இலக்கை நோக்கிச் செல்ல ஆரம்பித்தது. ஆனால் மீண்டும் அதே பாறையைக் கடக்கும்போது அது மீண்டும் கீழே விழுந்துவிட்டது. இவ்வாறு தொடர்ந்து எழுபது தடவைகள் தன் முயற்சிகளில் தோல்வி கண்ட அந்த எறும்பு தன்னுடைய எழுபத்தோராவது முயற்சியில் அந்த பாறையைக் கடந்து சென்று வெற்றி பெற்றது.**



**எறும்பின் விடாமுயற்சியைக் கண்ட தைமூர், "நான் போரில் ஒரு முறை தோல்வி கண்டவுடனேயே, என் தைரியத்தையும் நம்பிக்கையையும் முற்றிலும் இழந்து விட்டு இங்கு ஒளிந்து கொண்டிருக்கிறேன். எனினும் இன்று இந்த எறும்பு வாழ்க்கையில் வெற்றி பெறும் வழியை எனக்குக் காட்டிவிட்டது. நான் எழுபது தடவைகள் தோல்வி கண்டாலும் எழுபத்தோராம் முறையில் வெற்றிவாகை சூடுவேன்" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டார்.**



**முடிவில் தைமூர் பல வெற்றிகளைக் கண்டு தன்னை ஒரு பெரிய அரசனாக உயர்த்திக் கொண்டார்.**

**எனவே, நாம் நமக்கு ஏற்படும் தோல்விகளைக் கண்டு தளர்ந்து விடாமல், விடாமுயற்சியுடன் தொடர்ந்து உழைத்து வந்தால் அடைந்த தோல்வியை வெற்றியாக மாற்றிக் கொள்ளலாம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்வாவை கொலை செய்தது யார்?




மாலுமி சின்வா அகால மரணமுற்ற செய்தி, சில நிமிடங்களில் கப்பல் முழுவதும் பரவியது. கீழ்த்தட்டில், பூட்டிய அறைக்குள் இருந்த யுத்தக் கைதிகளெல்லாம் கத்திக்கொண்டு கதவை உடைத்தெறிந்து கொண்டு மேலே வந்தனர். சின்வாவின் பூத உடலைப் பார்த்து கேவிக்கேவி அழுது புலம்பினர். தங்களை கனிவுடனும், கரிசனையுடனும் பாதுகாத்து சகல வசதிகளையும் உதவிகளையும் மனமுவந்து செய்து தந்த மகராசி என்று ஒப்பாரி ஓலமிட்டனர். தங்களைக் கைதிகளாக நினைக்காது உடன் பிறப்பாக மதித்து நடந்ததாக வேறு சில கைதிகள் சொல்லி அழுதனர். மாலுமி சின்வா ஏன் அகோரமாகக் கொலை செய்யப்பட்டாள் என்பதில் கைதிகளின் மனத்தில் ஆத்திரம் பொங்கி வழிந்தது.

கைதிகள் அனைவருமே யுத்தத்தில் ஈடுபட்ட இராணுவ வீரர்களாகும். எதிரிகளால் சிறைப் பிடிக்கப்பட்டதாலேயே இவ்வாறு நாடு கடத்தப்படுகின்றனர் என்பது கப்பல் சிப்பந்திகள் எல்லோருக்கும் நன்கு தெரியும். இப்போது அவர்கள் கோபாவேசம் கொண்டு கொதித்தெழுந்திருப்பதால் என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என்ற அச்சம் சிப்பந்திகள் மனதில் ஏற்பட்டு எல்லோரும் பயந்து நடுங்கினர்.



படகுக் கப்பலிலே பயணித்த அந்த இந்திய கடலாய்வாளர் இப்போது கட்டளையிடும் அதிகாரியாக மாறினார். அவர் என்ன சொன்னாலும் உடனேயே செய்வதற்கு யுத்தக் கைதிகள் அனைவரும் ஆயத்தமாயிருந்தனர். கப்பல் சிப்பந்திகள், உதவி மாலுமி உட்பட சகலரையும் யுத்தக் கைதிகள் தாம் இருந்த கீழ்த் தட்டிலே போட்டுப் பூட்டினர். கப்பல் நடுக்கடலில் நங்கூரம் பாய்ச்சி நின்றது. சின்வாவை கொலை செய்தது யார் என்ற உண்மையைச் சொல்லாதவரை அனைவரையும் இருட்டறையிலே போட்டு அடைக்குமாறும், அன்னந் தண்ணீர் எதுவுமே கொடுக்கக்கூடாது என்றும் இந்தியர் உத்தரவிட்டார்.

விசாரணைகள் பல்வேறு கோணத்திலே நடைபெற்றன. அதிகளவு சந்தேகத்துக்குரிய உதவி மாலுமி பிரதம சமையலாளன், மற்றொரு டெக்னீஷியன் ஆகிய மூவரும் கொளுத்தும் வெயிலின் உஷ்ணம் படும் வகையில் மேல்தளத்தில் தலைகீழாகக் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தனர். இப்போது அந்தப் படகுக்கப்பல் யுத்தக்கைதிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது.

உண்மையைச் சொல்லும் வரை விடப்போவதில்லை என்று கூறி யுத்தக்கைதிகள் அந்தச் சிப்பந்திகளை தடியால் தாக்கினர். திருக்கைமீன் வாலினால் ஓங்கி ஓங்கி அடித்தனர்.


**உண்மையைச் சொல்லும்வரை விடப்போவதில்லையென்று கூறி யுத்தக்கைதிகள் அந்தச் சிப்பந்திகளை தாக்கினர். உதவி மாலுமி மீதே அதிக சந்தேகம் இருந்ததால் அவன் தலைமீது ஒருவன் கடப்பாரையால் தாக்கச் சென்றான். அப்போது....?**

உதவி மாலுமி மீதே அதிகளவு சந்தேகமிருந்ததால் அவனது தலை மீது ஒரு கைதி கடப்பாரையால் ஓங்கி அடிக்கப் போக ''அடிக்காதீர்கள்.... நான் உண்மையைச் சொல்லி விடுகின்றேன்'' என்று கூச்சலிட்டு அவன் கூறத்தொடங்கினான்.

கடலிலே கிடைத்த 'ஆணிமுத்து' மாலுமி சின்வாவிடம் பாதுகாப்பாக இருந்தது. அதை எப்படியாவது கைப்பற்றிக் கொண்டு கப்பலிலிருந்து தப்பியோடத் திட்டம் தீட்டி அவளது அறைக்கு அடிக்கடி போய் வந்ததால் அறைக்கதவின் நம்பர்லொக்கை எப்படித் திறப்பது என்பதையெல்லாம் அறிந்து வைத்திருந்தேன். காந்தக்கட்டியின் உதவியுடன் கதவைத் திறந்து அறைக்குள் நுழைந்து ஆணிமுத்தைத் தேடினேன். ஆழ்ந்த உறக்கத்திலிருந்த சின்வா எனது அரவம் கேட்டு விழித்துவிட்டாள். இதனால், உள்ளே பலத்த போராட்டம் நடந்தது. இறுதியில் தலையணையை வைத்து முகத்தைப் பலமாக அழுத்தினேன். மூச்சுத்திணறி அவள் இறந்துபோனாள்'' என்று சொல்லி முடிக்க அங்கே மயான அமைதி நிலவியது.

(தொடரும்....)

# அருவிக் குளியல்



அருவியில் வெள்ளம் கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தது. கரடி கண்ணம்மா தன் குட்டி கண்மணியை அழைத்தது. ''கண்மணி... வா நாம் இன்று அருவியில் குளித்து வரலாம்...'' என்றது.

''நோ மம்மி... ஐ டோண்ட் லைக் இட்...'' என்றது குட்டி.

''வை மை டோட்டர். இந்த அருவியில் குளிப்பதற்கென்றே மக்கள் கூட்டம் கூட்டமாக நம் காட்டை தேடி வர்றாங்க. நீ என்னாடான்னா இப்படி அலட்சியம் செய்கிற'' என்றது மம்மிக் கரடி.

''எனக்குப் பயமா இருக்கு மம்மி...''

''நான் இருக்கேன்ல. நீ வந்து குளிச்சிப் பாரு. அப்புறமா விடவே மாட்ட...'' என்ற மம்மிக் கரடி அதனை அருவியை நோக்கி இழுத்துச் சென்றது.

''வாவ்... மம்மி ஸோ நைஸ்!'' என்றது குட்டிக் கரடி.

''கண்மணி உனக்கு இப்ப பிடிச்சிருக்கா?'' என்றது மம்மி.

''அம்மா! நாம் தினமும் இந்த அருவி நீரில் குளிப்பதால் நமக்கு என்ன நன்மை ஏற்படப் போகிறது'' என்று கேட்டது குட்டி.

''குட்டியே! இந்த அருவி நீர் மலை உச்சியில் இருந்து கொட்டுகிறது. இந்த அருவியில் பாய்கின்ற தண்ணீர் பல மூலிகைச் செடிகளைத் தழுவி நனைந்தபடி பாய்வதால் மருந்து நீராகவும் மாறுகிறது. அந்த நீரானது தினமும் நம் உடலில் படுவதால் நமக்கு எந்த நோயும் ஏற்படாது. நாம் நோய் நொடிகள் எதுவும் இல்லாமல் நல்ல ஆரோக்கியத்துடன் வாழலாம்'' என்றது கண்ணம்மாக் கரடி!

''அடேயப்பா! இந்த அருவி நீருக்கு அவ்வளவு மருத்துவக்குணம் இருக்கிறதா?'' என்று கேட்டது கரடிக் குட்டி.

''ஆமாம், இதன் மருத்துவத் தன்மையை நன்கு உணர்ந்துதான் அருவி நீர் அதிகமாகக் கொட்டும் வேளையில் எல்லோரும்,



''மக்கள் எல்லாம் இங்கே கூடிக் குளித்து மகிழ்கின்றனர்'' என்றது கரடி.

''மம்மி இனிமேல் தினமும் வந்து நாம் இந்த அருவியில் குளிக்கலாம்'' என்றது கண்மணிக் கரடி.

விஜய் சந்தா விபரம்

'விஜய் பத்திரிகைக்கு சந்தா செலுத்தி தபால் மூலமும், நேரடியாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

| | 1 வருடம் | 6 மாதம் |
|---|---|---|
| நேரடி விநியோகம் (கொழும்பிற்குள்) | ரூ.624/= | ரூ.312/= |
| தபால் மூலம் | ரூ.1404/= | ரூ.702/= |

பின்வரும் கூப்பனை பூர்த்தி செய்து அனுப்புங்கள்
*(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)*

பெயர்: ..............................
முகவரி: ..............................
தொ.பே.இல: ..............................
எமக்கு .............. மாதம்/வருடத்திற்கான இதழ்களை அனுப்பி வைக்கவும்.

.............................. ..............................
கையொப்பம் திகதி

உங்கள் சந்தாத் தொகையினைக் காசுக் கட்டளையாகவோ (Money Order), காசோலையாகவோ (Cheque) அனுப்பலாம். காசுக்கட்டளையை மாற்றும் தபால் கந்தோர் SLAVE ISLAND POST OFFICE எனக் குறிப்பிடவும். காசோலை (Cheque) அனுப்புவோர் Wijeya News Papers Ltd என்ற பெயருக்கு எழுதவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**CIRCULATION MANAGER,**
**Wijeya Newspapers Ltd.,**
**8, Hunupitiya Cross Road, Colombo-02**

மேலதிக விபரங்களுக்கு தொ.பே.இல - 0112479653

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊக்கமருந்து என்றால் என்ன?

## எவ்வாறு அவை இனங்காணப்படுகின்றன?





இலங்கையின் குறுந்தூர ஓட்ட வீராங்கனையான ஜானி சத்துரங்கனி தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தினை பாவித்தார் என்ற குற்றத்திற்காக அவருக்கு எதிராக சர்வதேச மெய்வல்லுனர் சங்கத்தினால் தடை விதிக்கப்பட்டமை நாம் அறிந்ததே. அவ்வாறே சர்வதேச மட்டத்தில் அடிக்கடி இவ்வாறு தடை செய்யப்பட்ட ஊக்கமருந்துகளை பாவித்தனர் என்ற குற்றச் சாட்டில் பல வீர, வீராங்கனைகள் தடைகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்து என்பது என்ன? எந்த அடிப்படையில் இவை வகைப்படுத்தப்படுகின்றன என்பது பற்றிய விளக்கங்களை இங்கு பார்க்கலாம்.

விளையாட்டுத்துறையில் ஈடுபடுகின்றவர்கள் பாவிக்கக்கூடிய மருந்து வகைகளின் பெயர்ப்பட்டியலை சர்வதேச ஒலிம்பிக் சம்மேளனம் அறிவித்துள்ளது. இதன்படி இந்த பட்டியலில் சேர்க்கப்படாத மருந்துகளை பாவிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. தடை விதிக்கப்பட்ட மருந்துகளைப் பெறுவதனால் சக்தி, ஊக்கம், உத்வேகம் போன்றவை ஏற்படுகின்றன. இதனால், இது ஏனைய போட்டியாளர்களுக்கு அநீதியாகவே அமைகின்றது. அத்தோடு இத்தகைய மருந்துகள் தற்காலிக சக்தியை, ஊக்கத்தை, உத்வேகத்தை தரவல்லதேயன்றி இவற்றை பாவிப்பதனால் நாளடைவில் பல வித பக்கவிளைவுகளும் நேரலாம். எனவே, இது ஆபத்தான விடயமாகவே கருதப்படுகின்றது.



இதற்கமைய விளையாட்டுத் துறையின் கௌரவத்தையும் கண்ணியத்தையும் காக்கும் பொருட்டே இவ்வகை மருந்து வகைகளுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாக ஒலிம்பிக் சம்மேளனம் அறிவித்துள்ளது.

குறிப்பாக இத்தகைய மருந்து வகைகள் வெவ்வேறு வகையான நோயாளிகளை சுகப்படுத்துவதற்காக தயாரிக்கப்பட்டவையாகும். பாமஸிகளிலும் இவை விற்கப்படுவதுண்டு. ஆனால், ஆரோக்கியமான நிலையில் இருக்கின்ற ஒருவர் இதனை பாவிப்பதனால் மாறுபட்ட விளைவுகளை அவை தோற்றுவிக்கின்றன. ஒருவகையில் கூறப்போனால் 1920 ஆம் ஆண்டுகளிலிருந்தே இப்படி தடைசெய்யப்பட்ட மருந்துவகைகளை பெறும் பழக்கம் இருந்ததாகவும் பதிவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

இவ்வாறு தடைசெய்யப்பட்ட மருந்துவகைகள் சுகவீனமுற்றவர்களுக்காக தயாரிக்கப்பட்டவையென்றால் விளையாட்டு வீரர்கள் உண்மையிலேயே சுகவீனமுற்றுவிட்டால் என்ன செய்வது என்ற கேள்வி எழலாம். இப்படிப்பட்டவர்களுக்காக விசேட மருத்துவப் பிரிவொன்று காணப்படுகின்றது. இங்குதான் குறித்த விளையாட்டு வீரர் மருந்து வகைகளைப் பெற வேண்டும். சுகவீனத்திற்கு ஏற்ற வகையிலான மருந்து இங்குதான் சிபாரிசு செய்யப்படுவதுடன் குறித்த மருந்தும் அங்கேயே வழங்கப்படும்.

மெய்வல்லுனர் போட்டிகளுக்கு மட்டுமன்றி எல்லா விதமான போட்டிகளுக்கும் மேற்குறிப்பிட்ட ஊக்கமருந்துத்தடை அமுல்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும், அறியாத்தனத்தில் மேற்படி மருந்துகளை பெற்றிருந்தால் என்ன செய்வது என்ற கேள்வியும் எழலாம். அவ்வாறு ஏற்பட வாய்ப்பில்லை. ஏனென்றால் இவை அநேகமாக விழுங்கும் மாத்திரைகள் அல்ல. அவை ஊசியால் உடம்பில் செலுத்தப்படுகின்ற மருந்துகளேயாகும். எனவே, அறியாமல் செய்த தவறு என்று இதனை எடுத்துக் கொள்ளமுடியாது.

இத்தகைய பின்னணியிலேயே உலக அளவில் இந்த ஊக்கமருந்து தடை குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்பட்டு வருகின்றது.

# தேசிய விளையாட்டு பரிசளிப்பு வைபவம் ஜூலையில் நடைபெறும்

## தேர்வு முறையில் சர்ச்சை....?



எதிர்வரும் ஜூலை மாதம் 16 ஆம் திகதி தேசிய விளையாட்டு விழா நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதியே இந்த விழா நடத்தப்படவிருந்த போதிலும் அனுசரணையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்கவே ஜூலை மாதத்திற்கு மேற்படி விழா ஒத்தி வைக்கப்பட்டது.

தேசிய பத்திரிகைகளில் வெளியிடப்படுகின்ற கூப்பனில் அளிக்கப்படுகின்ற வாக்குகளின்படி சிறந்த ஜனரஞ்சக வீரர், வீராங்கனை தெரிவு செய்யப்பட்டு பரிசு வழங்கப்படவுள்ளமை இந்த விளையாட்டு விழாவில் முக்கிய அம்சமாக அமையவுள்ளது. அது மட்டுமன்றி வருடத்தின் சிறந்த வலது குறைந்த வீரர், வருடத்தின் சிறந்த கனிஷ்ட வீரர், வீராங்கனை ஆகியோரும் தேர்வு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

மேலும், வருடத்தின் சிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனையும் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சிறந்த ஜனரஞ்சக வீரர், வீராங்கனை, சிறந்த வீரர், வீராங்கனைக்கு ரூபா மூன்று லட்சத்திலிருந்து பணப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர் விளையாட்டுத்துறையின் மேம்பாட்டிற்காக பாடுபட்ட 225 பேருக்கு தங்கப் பதக்கங்கள்வழங்கப்பட்டு கௌரவிக்கப்படவுமுள்ளனர்.



எனினும், சிறந்த ஜனரஞ்சக வீரர், வீராங்கனை தெரிவு விடயத்தில் மேற்கொள்ளப்படவுள்ள தீர்மானங்களையிட்டு விமர்சனங்கள் எழுந்துள்ளன. பத்திரிகை கூப்பன்கள் வழியாகவே மக்கள் மத்தியில் இதற்கான வாக்களிப்புக்கள் நடைபெறுகின்றன. எனினும், ஜனரஞ்சகம் என்ற அடிப்படையில் இலங்கையில் கிரிக்கெட் வீரர்களுக்குத்தான் அதிக பிரபல்யம் கிடைக்கப்பெறுகின்றது. அந்த வகையில் சனத்ஜயசூரிய, முரளிதரன், சங்கக்கார, மஹேல ஆகியோருக்கு கிடைக்கப் பெறாத வாக்குகள் பிரபல்யம் பெறாத சில கிராமப்புற வீரர்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக கணக்கெடுப்புக்கள் காட்டுகின்றன.

எனவே, இந்த வாக்கெடுப்பு முறையானது நியாயமாக நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இந்த விடயத்தில் விளையாட்டுத்துறை அமைச்சு எந்த வகையிலான தீர்மானத்தை எடுக்கும் என்று அறிவதில் விளையாட்டுத்துறை அபிமானிகள் ஆவலுடன் உள்ளனர்.

# முக்கோண போட்டி

இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் அணிகள் பங்கு கொள்கின்ற முக்கோண போட்டிகள் ஜூன் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய ஐ.பி.எல் போட்டிகளுக்குப் பின்னரே இப்போட்டிகள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) காலஅட்டவணையில் ஐ.பி.எல் போட்டிகள் இடம்பெற்றிராததால் இடைப்பட்ட ஒரு காலகட்டத்திலேயே ஐ.பி.எல் போட்டிகள் நடைபெறுகின்றன.



எனவே, ஐ.பி.எல் போட்டிகள் முடிவடைந்தகையோடு ஓய்வு பெறமுடியாத நிலையில் இந்திய அணியினர் பங்களாதேஷுக்கு செல்ல வேண்டியிருக்கும்.

**போட்டிக் கால அட்டவணை வருமாறு:**

| | | |
|---|---|---|
| ஜூன் 08 | - பங்களாதேஷ் | -பாகிஸ்தான் |
| ஜூன் 10 | - இந்தியா | -பாகிஸ்தான் |
| ஜூன் 12 | - இந்தியா | -பங்களாதேஷ் |
| ஜூன் 14 | - இறுதிப்போட்டி | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குதிரை மீதமர்ந்து வீர சாகசம் புரியும் ‘கவ் போய்’



## சொகுசு ஆசனம்

வேட்டைத் தொழிலுக்காக 12 மணித்தியாலங்களுக்கு மேலாக குதிரையில் சவாரி செய்ய வேண்டியுள்ளதால் குதிரை மீதுள்ள ஆசனத்தை மிகவும் சொகுசாகவும் அமைத்துக் கொண்டுள்ளனர். அந்த ஆசனம் பின்வரும் பகுதிகளைக் கொண்டிருக்கின்றது.




## உடை




### கவ் போய் எனப்படுவோர்

‘கவ் போய்’ என்றவுடன் உங்கள் நினைவுக்கு வருவது குதிரை மீதேறி சவாரி செய்தவாறே வீர சாகசங்கள் புரிபவர்களையாகும். மேற்கத்தேய திரைப்படங்களில், நாவல்களில் குதிரை வீரர்களை சித்தரித்து வெளிப்படுத்தப்படுகின்ற கதாபாத்திரங்களே உங்கள் மனத்திரையில் தோன்றும். எனினும், பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் ‘கவ் போய்’ என்றொரு சமூகத்தினர் வாழ்ந்திருந்தமையை நீங்கள் அறிவீர்களா? வெளிநாடுகளில் பிரதானமாக வாழ்ந்த இந்த சமூக குழுவினரே ‘கவ் போய்’ (Cow Boy) குதிரை சவாரி வீரர்கள் என்றழைக்கப்பட்டனர். இச்சமூகத்தினரை இலங்கையிலும் காணக்கூடியதாக இருந்தது.

நீங்கள் திரைப்படங்களில் குதிரை மீது ஏறி அமர்ந்தவாறு வீர சாகசங்களைப் புரியும் ‘கவ் போய்’ களைப் பார்த்திருந்தாலும் அவர்கள் மிகவும் துன்பகரமான வாழ்க்கை முறையையே வாழ்ந்து வந்துள்ளனர்.



### பயன்படுத்தும் ஆயுதங்கள்

நீண்ட கயிறு, இரும்பாலான கூரிய ஆயுதம், குதிரையை கட்டுப்படுத்தும் வகையான பாதணிகள், சாய்வு ஆசனம், தொண்டுக்கயிறு என்பன குதிரைச்சவாரி வேட்டை வீரர்களின் முக்கியமான ஆயுதங்களாகும்.

1860-1895 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் மிகவும் துன்பகரமான வாழ்க்கை முறையையே இவர்கள் வாழ்ந்து வந்துள்ளதோடு இவர்கள் மிகவும் சிரமமான பணிகளையே செய்ய வேண்டியிருந்தன.

அமெரிக்காவில் ‘மிசிசிப்பி’ நதியின் மேற்குக் கரையில் மேய்ச்சல் நிலங்களிலும் காடுகளிலும் வாழ்ந்த காட்டெருமைகளைப் பிடித்து நகரங்களுக்குக் கொண்டு வந்து அவற்றை இறைச்சிக்காக விற்பனை செய்வதே இவர்களது பிரதான தொழிலாக இருந்தது.

### வேட்டையாடுதல்

காட்டெருமைகளை வேட்டையாடுவதற்காக இவர்கள் நீண்ட நாட்களுக்கு குதிரைகளின் மீதேறி சவாரி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது.

அப்போது கடும் புயல், மழை, பனி மழை, கடும் குளிர் போன்ற மிக மோசமான காலநிலை மாற்றங்களுக்கும் அவர்கள் முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது.

அத்துடன் நில்லாது ‘மிசிசிப்பி’ நதிக்கரைக் காடுகளில் வாழ்ந்த ஆதிவாசிகளான செவ்விந்தியர்களின் தாக்குதல்களுக்கும் இவர்கள் முகம் கொடுக்க வேண்டியிருந்தது.

### இவர்களின் முடிவு

1900 ஆம் ஆண்டளவில் வேட்டை நிலங்களில் வாழ்ந்த காட்டெருமைகள் கூட்டத்தோடு பிடிக்கப்பட்டு பாரிய பண்ணைகளில் அடைக்கப்பட்டதாலும் காடுகளை ஊடறுத்து புகையிரதப் பாதைகள் அமைக்கப்பட்டதாலும் ‘கவ் போய்’ (குதிரை வீரர்)களின் தொழிலுக்குப் பாதிப்பு ஏற்படலாயிற்று.

அதனால், இவர்களது அன்றாட வாழ்க்கை படிப்படியாக பாதிக்கப்பட்டது. ஆயினும், அவர்கள் செய்த வீர சாகசங்கள் காலத்தால் அழியாதன. அவை புராதனக் கதைகளிலும் திரைப் படங்களிலும் காவியங்களிலும் பதிவாகிக் கொண்டேயிருந்தன.

### தனித்துவமான விளையாட்டுக்கள்

இந்தக் குதிரை சவாரி வீரர்கள் ‘மாரி’ காலத்திலும் ‘இளையுதிர்’ காலத்திலும் தமக்கு ஒப்படைக்கப்பட்ட பணிகள் முடிவடைந்ததும் தமது இனக் குழுவுக்கே உரிய விளையாட்டுக்களில் ஈடுபட்டனர்.

தமது திறமைகளை ஒருவருக்கொருவர் வெளிப்படுத்தும் சாகச நிகழ்ச்சிகள் பிரதான விளையாட்டுக்களாக இருந்தன. காட்டெருமைகளை தொண்டுக் கயிறு கொண்டு வீசிப் பிடிப்பது, காளை மாடுகளை அடக்குவது, குதிரை ஓட்டம் போன்றன முக்கியமான விளையாட்டுக்களாகும். இவை இன்றும் உலகப் புகழ் பெற்ற விளையாட்டுக்களாக இருந்து வருகின்றன.

இந்த ‘கவ் போய்’ இனத்தினர் இன்றும் அமெரிக்காவின் சில பிராந்தியங்களில் வாழ்ந்து வருகின்றனர். மேய்ச்சல் நிலங்களிலும் பண்ணைகளிலும் இவர்கள் பணிபுரிகின்றனர். குதிரை மீது சவாரி செய்து மாடுகளை மேய்த்தல், இறைச்சிக்காக வளர்க்கப்படும் காட்டெருமைகளை பராமரித்தல் என்பன இவர்களது தொழிலாகும்.

இன்று இவர்கள் பணிபுரியும் பண்ணைகளோ மிகவும் விசாலமானவை. எனவே, இந்தப் பண்ணைகளில் குதிரைகளில் சவாரி செய்வதாயின் நீண்ட நாட்களுக்குப் பயணிக்க வேண்டும். ஆகவே, நவீன கால ‘கவ் போய்ஸ்’ ஹெலிகொப்டர், கெப் (Cab) வாகனங்களில் பயணித்தவாறு தமது பணிகளை செய்து முடிக்கின்றனர்.




அமீர் ஹுஸைன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உங்களுக்குத் தெரியுமா? 3

எமது நாட்டில் நிர்மாணிக்கப்பட்ட நீர்த்தேக்கங்களுள் பிரசித்தி பெற்றது. சுமார் ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட வயல்நிலங்கள் இதனால் நீரைப் பெற்று போஷிக்கப்படுகின்றன. இதன்மூலம் நீர்மின் உற்பத்திக்கும் வழியமைக்கப்பட்டது. பிரித்தானியாவின் நிதி உதவியின் கீழ் 1980, மார்ச் 23 இல் இதற்கான ஆலோசனைத் திட்டங்களின் அடிப்படையில் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்த நீர்தேக்க நிர்மாணப் பணிகளை ஒரே தடவையில் செயற்படுத்துவது சிரமமாக இருந்ததனால் அதன் பணிகள் 14 பிரிவுகளின் கீழ் அமுல்படுத்தப்பட்டன. இந்த நீர்த்தேக்க செயற்றிட்டத்தினால் தெல்தெனிய நகரம் முற்றாக நீரில் மூழ்கியது. இருப்பினும் இதனை அண்டி முன்னரிலும் பார்க்க முன்னேற்றகரமான நகரமொன்று கட்டியெழுப்பப்பட்டது. இந்த நீர்த்தேக்கத் திட்டம் 1985, ஏப்ரல் 12 ஆம் திகதி அப்போதைய பிரித்தானியப் பிரதமராக இருந்த மார்கரட் தட்சரினால் திறந்து வைக்கப்பட்டது. இந்நீர்த்தேக்கம் எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?

....................................................

(ரந்தெனிகல, மகாவெலி, விக்டோரியா)



**அற்லஸ் அறிவுக்கு விருந்து - 153 - பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...**

போட்டி: 01
அஸ்ரா மரியம், தரம் - 5^A,
அல்-அஸ்ஹர் ம.கல்., திஹாரி.

போட்டி: 02
இ.பெனிகிரேசியன், தரம் - 7^C,
தி/ உவர்மலை விவேகானந்தா கல்.,
திருகோணமலை.

போட்டி: 03
எம்.சாகீர், தரம் - 7,
ப/ அல் இர்ஷாட் ம.வித்., பதுளை.

போட்டி: 04
எம்.நஜூத் அமீர், தரம் - 7^A,
அல்-மின்ஹாஜ் தே.பாட., ஹப்புகஸ்தலாவ.

போட்டி: 05 (குறு.போ-164)
எஸ்.கவிதா, தரம் - 12^(கலை),
தமிழ் ம.கல்., பண்டாரவளை.

### அறிவுக்கு விருந்து 153 விடைகள்

**போட்டி: 02**
பின் பக்கம்

**போட்டி: 03**

(A)
01. 5 பச்சை நிறத் தோடைகள்
02. 50 கிராம்
03. 25 கிராம்
04. 75 கிராம்


(B)
அ) 5, 8, 12, 17, 23, 30, 38, 47
ஆ) A, B, C, a, b, c, D, E, F, d, e, f
இ) 324, 300, 276, 252, 228, 204, 180
ஈ) 7, 14, 21, 28, 35, 42, 49, 56
உ) VI, XVI, XXVI, XXXVI, XLVI, LVI, LXVI

**போட்டி: 04**

(A) *படங்கள் மேலிருந்து கீழாக...*
1-சிங்கப்பூர்
2-சீனா
3-இந்தியா
4-பாகிஸ்தான்
5-சுவீடன்
6-நோர்வே

(B)
1) குளவி
2) கடுமை
3) விபூதி
4) தும்பிக்கை
5) கோவை

### வித்தியாசங்களில் X அடையாளமிடுக 1








**தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்**

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2008.05.21 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 156**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

### (A) பிழைகளைத் திருத்தி எழுதுக 2

கியூபா ஒரு குட்டித்தீவு. வட அமெரிக்காவுக்குக் கீளே காீபியன் கடல்வெளியில், கறும்புக் காடாக விரிந்து கிடக்கும் அழகிய தேசம்.

இங்கு பூர்வீகக் குடிகளாக செவ்வியந்தியர்களே வாழ்ந்து வந்தன. அந்த மண்ணில் வந்து விழுந்தான் கொலம்பஸ். அவருல் புதிதாக ஒரு நாட்டைக் கண்டுபிடித்த உட்சாக வெறி! ஆயிரக்கணக்கான ஸ்பானிய வீரர்கள், பூர்வீகக்குடிகளை கூட்டம் கூட்டமாக வெட்டிச் சாய்த்தது. எஞ்சியவர்களை அடிமைகளாக்கினர். பிற்பாடு, ஸ்பானியர்கள் கூட்டமாக கியூபாவில் குடியேறினர். நாள் செல்லச் செல்ல கியூபாவின் வழத்தை ஸ்பானிய அரசு அட்டை போல் உறின்சத் தொடங்கியது. இந்த அடிமை வாழ்வில் அவ்வப்போது புரக்சியின் தீப்பொரிகள் தோன்றி மறைந்தன.

### (B) இடைவெளிகளை நிரப்புக

1) b ...... ne......it ( a, e, p, f) - அனுகூலம்
2) fi.....e br.......g.....de (i, a, g, r) - தீயணைப்புப் படை
3) .......he......t.......r (o, l, c, s, e) - புகலிடம்
4) ......uth......r (d, o, u, a) - எழுத்தாளர்
5) pat.......en......e (r, c, s, i) - பொறுமை

### 4


(A)





(B)

மூன்று உருவங்களும் ஒரே அளவுடையனவா?

ஆம்/இல்லை



### 5 குறுக்கெழுத்துப் போட்டி இல.167




**மேலிருந்து கீழ்**

01. உலகின் அகலமான நீர்வீழ்ச்சி
02. அறுபது செக்கன்கள் சேர்ந்து....
03. தலை-ஒத்தகருத்துச்சொல்
04. உலகின் மிகப் பெரிய கண்டம்.
07. வட அமெரிக்காவிலுள்ள பறவைக்கால் ஏரிகளுள் ஒன்று.
08. புகார் தெரிவித்து எழுதப்படும் கடிதம்.
09. மாட்டின் மலம்.

**இடமிருந்து வலம்**

01. நள்ளிரவு என்றும் குறிப்பிடலாம்.
05. பயத்தில் மனம் கலக்கமுற்றிருத்தலைக் குறிக்கும் சொல்.
06. உலக நாடுகளை உள்ளடக்கிப் பிரிக்கப்பட்டிருக்கும் பாரிய நிலப்பரப்பு.
09. பகுபதங்களில் விகுதிக்கு முதலில் வருவது.
10. மாமிசத்தை உணவாகக் கொள்பவை.

### குறுக்கெழுத்துப்போட்டி 164 விடைகள்

| மேலிருந்து கீழ் | இடமிருந்து வலம் |
|---|---|
| 01. இருக்கு | 01. இளவரசன் |
| 02. வலு | 04. உரி |
| 03. சவாரி | 05. குடாநாடு |
| 04. உடுக்கை | 08. டோக்கியோ |
| 06. நாடோடி | 09. அட்டிகை |
| 07. யோகம் (குழம்பி) | |

குறுக்கெழுத்துப் போட்டி -167
"விஜய்" த.பெ.எண். 2037
கொழும்பு

**பாராட்டுப் பெறுவோர்**

றிஸாஉல் கரீம், தரம் - 7,
டி.எஸ்.சேனாநாயக்க கல்., கொழும்பு-07.

பா.ஹஸ்னா, தரம் - 11,
அல்-ஹம்ரா ம.வித்., தர்ஹா நகர்.

அ.வர்கீசன், தரம் - 8^G,
இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு.

### அன்பு மாணவர்களே!

இது உங்கள் கவனத்திற்கு.....

இனிவரும் போட்டிகளுக்கான விடைகளை நீங்கள் தபாலட்டையில் ஒட்டி எமக்கு அனுப்பி வையுங்கள். விடைகளை அனுப்பும் போது தவறாமல் உங்கள் பெயர், முகவரி, கல்வி கற்கும் தரம், பாடசாலையின் பெயர், அதன் முகவரி, வசிக்கும் நகரம், மாவட்டம் என்பனவற்றையும் எழுதி அனுப்புங்கள். அவை போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை காலதாமதமின்றி சேர்ப்பதற்கு பெரும் துணையாக அமையும். அத்துடன், நீங்கள் உங்களுக்கு விரும்பிய எந்தவொரு போட்டியிலும் கலந்து கொள்ளலாம் என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகின் மிகப் பழைமை மிக்க கோயில்

உலகின் மிகப் பழைமை மிக்க கோயில் துருக்கியின் சன்லியூர்பா மாகாணத்தில் உள்ள கொபேக்லி (Gobekli Hill) ஹில் மலையில் அமைந்துள்ளதாக ஜேர்மனியின் பிரபல செய்திப்பத்திரிகைகளில் ஒன்றான 'டி வெல்ட்' (Die welt) தகவல் வெளியிட்டுள்ளது. இந்தக் கோயில் சுமார் (12,000) பன்னிரெண்டாயிரம் வருடங்கள் பழைமை மிக்கது என்றும் அந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகையில் 'வேட்டைக்காரர்களுக்கான புனித மலை' என்னும் தலைப்பில் வெளியாகியுள்ள கட்டுரையிலேயே இந்தத் தகவல்கள் இடம்பெற்றுள்ளன.



ஜேர்மன் தொல்பொருள் ஆராய்ச்சியாளரான க்ளோஸ் சமிட் என்பவரே இந்தக் கோயிலை கண்டுபிடித்துள்ளதாகவும் இக்கோயில் 15 மீற்றர் உயர மலையில் அமைந்துள்ளதாகவும் அங்கு ஒரு தனிமரம் மட்டும் இருப்பதாகவும் அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புராதன காலத்தின் ஒரு புனித பிரதேசமாக இக்கோயில் அமைந்துள்ள மலையை உள்ளூர்வாசிகள் போற்றுகின்றனர். இதற்கு முன்னர் கிடைத்த தகவல்களின்படி ஜோர் [illegible]ில் அமைந்துள்ள '9000' ஒன்[illegible]தாயிரம் வருடங்கள் பழைமை மிக்க கோயில்தான் உலகின் மிகப் பழைமை மிக்க கோயில் என்று கருதப்பட்டது. தற்போது இந்தக் கோயில் பற்றிய தகவல் வெளியா[illegible]யுள்ளதால் இனி உலகின் ஏனைய பகுதிகளில் உள்ள பழைமை மிக்க கோயில்கள் பற்றிய தகவல்களும் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் அக்கட்டுரையில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோயிலின் சுற்றாடலை நோக்கும் போது உள்ளூர்வாசிகள் இங்கு முன்னைய காலத்தில் வேட்டையாடியும் பண்ணைகள் செய்தும் உள்ளதாக தெரிகிறது. கோயிலின் அமைப்பை நோக்குகையில் அதனை வடிவமைப்பதிலும், கட்டுவதிலும் திறமை மிக்க தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவதாகவும் அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நிக்கபிட்டிய தப்பி ஓடினான்

## வரலாற்றிலிருந்து..



1. பிலிப் டி ஒலிவேரியா இடையூறுகள் எதனையும் பொருட்படுத்தவில்லை. தொடர்ந்தும் முன்னேறிச் சென்றான். ஏழு கோறளையினுள் நுழைந்தான். போர்த்துக்கேயரில் பலரைக் கொல்வதோடு ஏனையோரை நாட்டில் இருந்து துரத்த வேண்டும் என்ற சுலோகங்களை கேட்க வேண்டிய நிலை அவனுக்கு ஏற்பட்டது. அது பன்னிரண்டு கிராமங்களின் யுத்த பூமியிலாகும். எனினும், அவன் இதனால் குழப்பம் அடையவில்லை.

2. மேலும், முன்நோக்கிச் சென்றான். அதிக தூரம் செல்வதற்கு முன் போர்த்துக்கேய முகாம் ஒன்றைச் சந்தித்தான் அதனுள் பிரவேசித்த பிலிப் டி ஒலிவேரியா அங்கிருந்த படை அணியினருடன் ஒன்றிணைந்தான். பின்னர் அவர்கள் அருகில் இருந்த ஊர்களை அழிக்கத் தொடங்கினர். இதற்கிடையில் ஒலிவேரியாவின் 'லஸ்கிரிஞ்ஞா' படையினர் ஆயுதங்களுடன் கிளர்ச்சியாளர்களுடன் சேர்ந்தனர்.

3. மல்வானையில் இருந்த போர்த்துக்கேய தளபதி சகல படை அணிகளையும் ஒன்று சேர்த்தான். அனைத்து படைகளையும் மலையகப் போர் முனைக்கு அனுப்பினான். அவன் 'லஸ்கிரிஞ்ஞா' படையினர் விலகிச் சென்ற விடயம் கேள்விப்பட்டதும் மிகவும் கோபம் கொண்டான். அது சம்பந்தமான விசாரணைகள் நடத்தப்பட்டன. அதில் குற்றவாளியாக பிலிப் டி ஒலிவேரியா காணப்பட்டான்.




4. தளபதி உடனடி நடவடிக்கைகளில் ஈடுபட்டார். ஒலிவேரியாவை மாவட்ட அதிகாரி பதவியில் இருந்து இறக்கினார். அவனுக்குப் பதிலாக வேலைகளை கவனிப்பதற்காக ஏழுகோறளையின் மாவட்ட அதிகாரியை நியமித்தார். அவர்தான் டொன் கொன்ஸ்டென்ட்டய்ன் நவரத்ன என்பவர். இதற்கிடையில் சிங்காசனத்திற்கு உரிமை கோரிக்கொண்டு நிக்கப்பிட்டிய எனும் போலியான நபர் ஒருவன் வெற்றி விழாவை நடத்திக்கொண்டு கொழும்பு நோக்கி வந்தான்.

5. பாதையின் இரு மருங்கிலும் மக்கள் அவனை வரவேற்று வாழ்த்துத் தெரிவித்து உற்சாகப்படுத்தினர். அந்த வெற்றிக் கோஷங்களின் மத்தியில் அவன் நாகலகமைக்கு வந்தான். அங்கு முகாம் ஒன்றை அமைத்தான். டொன்கொன்ஸ்டென்டய்ன்ஸ் சகல படை அணிகளையும் கொண்டு வந்தான். போலி நிக்கப்பிட்டியவுடன் சண்டையிட்டான். அதில் கொன்ஸ்டென்டைன்ஸ் வெற்றி பெற்றான். போலி நிக்கப்பிட்டியவும் அவனது குழுவினரும் தோல்வி அடைந்தனர்.

6. போலி நிக்கப்பிட்டிய துரித நடவடிக்கையில் ஈடுபட்டான். மீண்டும் மாறுவேடம் பூண்டான். தனது குழுவினரை கைவிட்டு தப்பி ஓடினான். அதனால், கலவரமடைந்த சிலர் கொன்ஸ்டென்டைன்ஸ் இடம் சேர்ந்தனர். ஏனையோர் விலகிச் சென்றனர். இதற்கிடையில் பெரெட்டோ சேனை ஒன்றைக் கொண்டு வந்தான். சப்ரகமுவவில் போர்த்துக்கேய கோட்டை மீது கடுந்தாக்குதலை நடத்தினர்.

7. அந்தக் கோட்டையில் காவல் கடமையில் இருந்த படையினரை கைது செய்தனர். அதன்பின் றைகம கொறளையை கைப்பற்ற முயற்சித்தனர். அதுவும் வெற்றி அளித்தது. அத்தோடு மாத்தறையில் இருந்த 'லஸ்கிரிஞ்ஞா' படையினர் மாவட்ட அதிபரை கைவிட்டுத் தப்பி ஓடினர். அதனால், அச்சமடைந்த மாவட்ட அதிபர் பாதுகாப்புத் தேடி காலிக்கு வந்தார். அங்கு குடியேறினார்.

8. இக்கால கட்டத்திலும் கூட நாட்டின் கிளர்ச்சிக்கு முடிவேற்படவில்லை. கிளர்ச்சி நிறுத்தப்படவில்லை. போர்த்துக்கேயர் அதனை முடிவுக்கு கொண்டு வர மீண்டும் முயற்சித்தனர். கிளர்ச்சி தொடர்ந்து நடந்த ஊர்கள், கிராமங்கள் அழிக்கப்பட்டன.





எழுதுபவர்: திலகன்
சித்திரம் : அபயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LIBRARY
JAFFNA.





# கரணமடித்து சாகஸம் காட்டும் விமானங்கள்

நாடுகளில் விசேட அரச தினங்களின் போது வானத்திலே விமானங்களின் சாகஸக் காட்சிகள் நடத்தப்படுவதை நாம் கண்டிருப்போம்.

இன்றைய காலத்தைவிட ஆரம்ப காலங்களில் இப்படியான விமான சாகஸங்களை நடத்துவது ஆபத்தான காரியமாகவே அமைந்திருந்தது. அந்நாட்களில் பயன்பாட்டிலிருந்த விமானங்களில் போதிய அளவு தொழில்நுட்ப வசதிகள் காணப்படாமையின் காரணமாக பல்வேறு விபத்துக்களும் ஏற்பட்டிருந்தன.

இதனால், அந்நாட்களில் ஏராளமான விமானஓட்டிகள் மரணமாகியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கையில் விமான சாகஸங்கள்

இருப்பினும் இன்றைய காலகட்டத்தில் எல்லாமே மாற்றம் கண்டுள்ளன. அநேகமான நாடுகளில் முக்கிய தினங்களில் விமான சாகஸ நிகழ்ச்சியானது முக்கியவோர் அம்சமாக அமைந்துள்ளது. விமான தொழில்நுட்பம் மிகச் சிறந்த வளர்ச்சி நிலையை அடைந்துள்ளமையினால் விபத்துக்கள் ஏற்படுவது கணிசமான அளவில் குறைவடைந்துள்ளது. இலங்கையிலும் விமானப் படையினர் பல்வேறு சந்தர்ப்பங்களில் விமானங்களில் சாகஸ நிகழ்ச்சிகளை செய்வதுண்டு. குறிப்பாக சுதந்திர தின வைபவங்களின்போது இத்தகைய சாகஸ நிகழ்ச்சியை கண்டுகளிக்கலாம்.

## போள் மெண்டிஸ்

விமானத்தை கரணமடிக்கச் செய்யும் சாகஸத்தில் குறிப்பிடக்கூடியவர் தான் போள் மெண்டிஸ் என்ற விமானமோட்டி. இவர் 1920 ஆம் 1930 ஆம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலகட்டங்களில் மிகச் சிறப்பாக விமான சாகஸங்களை நடத்திக் காட்டியமையால், அக்காலகட்டங்களில் திரைப்படங்களில் விமா சாகஸ காட்சிகளை காட்டக்கூடிய வாய்ப்பும் இவருக்கு கிட்டியிருந்தது. இதனையடுத்து அவர் ஹொலிவூட் திரையுலகில் சிறந்தவோர் நடிகராக மிளிர்ந்தார்.



## முதலாவது கரணம்

விமானத்தை கரணமடிக்கச் செய்து சாகஸம் செய்த முதலாமவர் என்ற பெருமைக்குரியவர் 'லின்க்கன் பீச்' என்பவராகும். இவரது கரணத்தைப் பார்த்து ஏராளமானவர்கள் அதிர்ச்சியடைந்து திக்குமுக்காடிப் போயிருந்தனராம்.



## விளையாட்டு

விமான சாகஸமானது இன்று மேற்கத்திய நாடுகளின் விளையாட்டுத் துறையில் ஓர் அம்சமாகவும் இடம் பெற்றுள்ளது. இத்தகைய விளையாட்டில் கலந்து கொள்வதற்கென்றே பலரும் பயிற்சிகளை எடுத்து வருகின்றனர்.

விமான சாகஸ விளையாட்டில் 'பெட்டீ வென்ஸ்டாஸ்' என்பவர் மிகவும் பிரபல்யம் பெற்றவராவார். இவரது விமான சாகஸங்களைப் பார்ப்போர் விழிபிதுங்கி மிகுந்த பயமும், ஆச்சரியமும் கலந்து பார்ப்பார்களாம்.






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2008, மே மாதம் 14 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday May 14, 2008.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org